3 1 OCT 1966

ஆரம்பக்கல்வி

ஆசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3]　　[தனி இதழ் 25 ந. பை.

மலர் 30	அக்டோபர் 1966	இதழ் 10

ஆற்ற வேண்டிய ஐந்து செயல்கள்

சென்ற சில வாரங்களாக, வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளில், பல்கலைக் கழகங்கள்-கல்லூரிகள் ஆகியவற்றின் மாணவர்களிடையே, எல்லையற்ற குழப்பமும் ஆர்ப்பாட்டப்போக்கும் தலைவிரித்தாடி வருகின்றன.

அவர்களிற் பல்லாயிரவர் தத்தம் வகுப்புகளுக்குச் செல்லாமல் வேலை நிறுத்தம் செய்துள்ளார்கள்; போலீசாரின் தடையை மீறி ஊர்வலம் நடத்தியுள்ளார்கள்; தடியடிப் பிரயோகம்-துப்பாக்கிப் பிரயோகம் ஆகியவை நடைபெற்றுள்ளன.

பஸ்கள் கொளுத்தப்பட்டிருக்கின்றன; தபால் நிலையங்கள் முற்றுகையிடப் பட்டிருக்கின்றன; இரயில்வே ஸ்டேஷன்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன.

பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள், கல்லூரித் தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள் ஆகியோரின் அன்பு நிறைந்த வேண்டு கோள்களைப் புறக்கணித்துவிட்டு, பல்வேறு வன்முறைச் செயல் களில் மாணவர்கள் ஈடுபட்டுள்ளார்கள்.

நாளுக்கு ஓர் ஆர்ப்பாட்டம்-வேளைக்கு ஒரு கிளர்ச்சி என்கிற முறையில் மாணவர்களிடையே நிலைமை உருவாகியிருக்கிறது.

பொது வேலை நிறுத்தம்—அர்த்தால்—கடையடைப்பு—கடை களை மூட மறுப்பவர்கள்மீது கல்வீச்சு—மாணவர்களுக்கும் போலீ சாருக்கும் கைகலப்பு—இவையும் இவைபோன்ற பிற விரும்பத் தகாத நிகழ்ச்சிகளும் அடிக்கடி வீறி வெடித்து நிலைமையை மோச மாக்கி வருகின்றன.

குறிப்பாகவும் சிறப்பாகவும் உத்தரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், காஷ்மீர் ஆகிய மாநிலங்களில், மாணவர்களின் பதட்ட நிலையும் ஆர்ப்பாட்டப் போக்கும், நாட்டின் நலன் நாடும் நல்லறிவாளர்கள் அனைவருக்கும் கவலையை அளிக்கத் தக்க அளவுக்குப் பெரியதொரு வடிவத்தைப் பெற்றிருக்கின்றன.

மாணவ சமுதாயத்தின் இக்கிளர்ச்சிகளிலும் ஆர்ப்பாட்டங் களிலும், சமூகவிரோத சக்திகளும் குழப்பம் விளைவித்து அதன் மூலம் பலன் பெற விழையும் குண்டர்களும் எப்படியோ இடம் பெற்று, கொந்தளிப்பையும் குழப்பத்தையும் ஒன்றுக்குப் பத்தாகப் பெருக்கியிருக்கிறார்கள் என்பதுஉண்மைதான். ஆனால் அதே சம யத்தில் அடிப்படையில் இக்கிளர்ச்சிகள் யாவும் மாணவர்களின் கிளர்ச்சிகளே என்பதில் துளியும் ஐயமில்லை.

தத்தம் கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் ஒழுங்கான முறையில் வகுப்புகளுக்குச் சென்று அமைதியான வகையில் கல்விப் பயிற்சியில் ஈடுபட வேண்டிய மாணவர்கள் ஏன் இத்தகைய ஆர்ப் பாட்டச் செயல்களிலும் வன்முறைகிளர்ச்சிகளிலும் ஈடுபடுகிறார்கள். அமைதியின் உருவங்களாகவும் அன்பின் சின்னங்களாகவும் பொறுமையின் இருப்பிடங்களாகவும் திகழ வேண்டிய அவர்களி டையே இத்தகைய வெறிச் செயல்களும் கட்டுப்பாடற்ற போக்கும் பெருகி விட்டது எதனால் ?

இந்தியத் திருநாட்டின் எதிர்காலம் வளம் செறிந்ததாகவும் நலம் மிகுந்ததாகவும் திகழவேண்டும் என்னும் நல்லெண்ணம் படைத்த எவருடைய உள்ளத்திலும் இயல்பாக எழக்கூடிய கேள்வி கள் இவை.

மாணவர்களின் கட்டுப்பாடின்மைக்கு வித்திட்ட மூல காரணங்கள் இவை இவை என்று, சில காரணங்களை அண்மை

யில் புது டில்லியில் கூடிய துணைவேந்தர்கள் மாநாடு எடுத்துக் காட்டியிருக்கிறது. வேறு சில காரணங்களை அதற்கு முன் அதே நகரத்தில் கூடிப் பேசிய போலீஸ் இன்ஸ்பெக்டர்—ஜெனரல்கள் மாநாடு சுட்டிக் காட்டியுள்ளது. மற்றும் சில காரணங்களை இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர் திருமதி இந்திராகாந்தி, உள்துறை அமைச்சர் திருவாளர் குல்சாரிலால் நந்தா ஆகியோர் எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்தியக் குடியரசின் தலைவர் பேரறிஞர்—டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், சில காரணங்களை விளக்கிக் கூறியுள்ளார்கள். பல்வேறு நாளிதழ்களின் தலையங்கங்கள்—கல்வித்துறை வித்தகர்களின் சொற்பொழிவுகள் ஆகியவற்றில் வேறு சில காரணங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்தக் காரணங்கள் அனைத்தையும் அலசி ஆராய்ந்து பார்த்த போது, மாணவர்களிடையே காணப்படும் கட்டுப்பாடின்மைக்கு உரிய தலைசிறந்த காரணமாக நமக்குக் காட்சியளிப்பது, தற்போதைய கல்வி அமைப்பில், மாணவர்கள் - ஆசிரியர்கள் ஆகியோருக்கிடையே நெருக்கமான தொடர்பு இல்லாமல் இருப்பதே ஆகும்.

ஆரம்பக் கல்வி நிலை
நடுத்தரக் கல்வி நிலை
கல்லூரிக் கல்வி நிலை

ஆகிய இந்த மூவகைக் கல்வி நிலைகளில் எந்த நிலையை எடுத்துக் கொண்டாலும் சரி, ஆசிரியர்கள்—மாணவர்கள் ஆகியோருக்கு இடையே இருக்க வேண்டிய அளவு தொடர்பும் நெருக்கமும் இப்போது இல்லை. இந்த உண்மையை எவரும் மறுக்க முடியாது.

ஆரம்பப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய மூவகைக் கல்வி நிலையங்களிலும், ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை அளவுக்கு மீறியதாய் அமைந்திருக்கிறது.

ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை சுருங்கிய அளவுடையதாக இருந்தால்தான், ஆசிரியரால் ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியே கவனத்தில் வைத்துக் கொள்ளமுடியும். அத்தகைய நிலையில்தான், ஒவ்வொரு மாணவனின் சிறப்பான இயல்புகளையும் தகுதி—திறமைகளையும் குற்றம் குறைகளையும் ஆசிரியரால் தெளிந்து அறிந்து கொள்ள முடியும். அப்படி அறியமுடிந்தால்தான் ஒவ்வொரு மாணவனிடமும் இயற்கையாக அமைந்துள்ள சிறப்புத் திறமைகளை மேலும் கூர்மையுடையதாக மாற்றி அமைப்பதும், குறைபாடுகள்

காணப்பட்டால் அவற்றைச் சிறிது சிறிதாக அகற்றுவதற்கான முயற்சிகளைச் செய்வதும், ஆசிரியரால் மேற்கொள்ளப்படமுடியும். ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே இவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்குமானால், அத்தகைய நிலையில், ஆசிரியர் மீது மாணவர்களுக்கு அளவற்ற மதிப்பும் பற்றும் பாசமும் பொங்கி எழும். அத்தகைய சூழ்நிலையில் மாணவர்களிடையே ஒழுங்கீனமான நிலையோ கட்டுப்பாடற்ற போக்கோ தோன்றமுடியாது. தப்பித் தவறி எப்போதேனும் ஒரு சமயத்தில் அத்தகைய நிலைமை தோன்றினாலும் ஆசிரியர்களால் அதனை எளிதில் கட்டுப் படுத்திவிடமுடியும்,

ஆனால் இன்றையதினம் இந்தியாவின் கல்வி நிலையங்களில் காணப்படுகிற நிலைமையோ, இதற்கு நேர்மாறானதாக சிறிதளவும் விருப்பத்தகாததாகவும் ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட வழி அற்றதாகவும் அமைந்திருக்கிறது. ஆரம்பக் கல்வி, நடுத்தரக் கல்வி, கல்லூரிக் கல்வி ஆகிய மூவகைக் கல்வி நிலைகளிலும் இந்தத் தவறான நிலைமை காணப்படுகிறது என்றாலும், கல்லூரிகளைப் பொறுத்தவரை இந்தத் தவறு உச்ச கட்டத்தை அடைந்து விட்டிருக்கிறது. கல்லூரிகளில் நடைபெறுகிற சில வகுப்புகளைப் பார்க்கிறபோது, அவை வகுப்புகள்தானா அல்லது திருவல்லிக்கேணிக் கடற்கரைப் பொதுக்கூட்டங்களா என்று ஐயுறவேண்டிய அளவுக்கு அந்த வகுப்புகளில் மாணவர்களின் எண்ணிக்கை பெருத்துப் போயிருக்கிறது. அப்படிப் பெருத்துவிட்டிருக்கிற காரணத்தால், ஒரு குறிப்பிட்ட மாணவர் தன்னுடைய வகுப்பைச் சேர்ந்தவர்தானா அல்லவா என்பதைக்கூடப் பெரும்பாலான சமயங்களில் ஓர் ஆசிரியரால் திட்டவட்டமாகக் கூறமுடிவதில்லை. இத்தகைய சூழ்நிலையில் ஒவ்வோர் மாணவன் மீதும் ஆசிரியரால் எவ்வாறு தனிக்கவனம் செலுத்த முடியும்? அப்படிச் செலுத்த முடியாத நிலையில், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே மாபெரும் இடைவெளி ஏற்பட்டுவிடுகிறது. வேதனை தரத்தக்க இச்சூழ்நிலையில், கட்டுப்பாடற்ற போக்கும் குழப்ப மனப்பான்மையும் மாணவர்களை முற்றுகையிடுகின்றன என்றால் அதில் வியப்பென்ன இருக்க முடியும்?

இக்கால மாணவர்களிடம் காணப்படும் கட்டுப்பாடின்மைக்கு மற்றொரு காரணம், இன்றைய சமுதாயத்தில் ஆசிரியர் பெருமக்களுக்குத் தரப்படுகிற அந்தஸ்து அல்லது மதிப்பு மிக மிகக் குறைவாக இருப்பதாகும். எந்தச் சமுதாயத்தில், ஆசிரியர் பெருமக்களுக்கு, உதட்டு அளவில் அல்ல—உண்மையாகவே உயர்ந்த மதிப்பும் செல்வாக்கும் தரப்படுகின்றனவோ அந்தச் சமுதாயத்தில்தான் ஆசிரியர்கள்மீது மாணவர்களுக்கு மிகுந்த மதிப்பும் மரியாதையும்

இருக்கும். அப்படி இருக்கும் நிலையில்தான் கட்டுப்பாடற்றபோக்கு மாணவர்களை விட்டு விலகி நிற்கும். ஆனால் இன்றைய இந்தியாவில் ஆசிரியர் பெருமக்களுக்குத் தரப்பட்டுள்ள மதிப்பு அல்லது அந்தஸ்து, நியாயமாகத் தரப்படவேண்டிய அளவோடு ஒப்பிட்டுப் பார்த்தால், மிக மிகக் குறைவாக இருக்கிறது. இது, யாராலும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையாகும்.

ஆசிரியர்களுக்குத் தரப்படுகிற மதிப்பு உயர வேண்டுமானால், அவர்களுக்குத் தரப்படுகிற ஊதியம் கணிசமான அளவுக்கு உயர்ந்தாகவேண்டும். பிரபல தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அந்தத் தொழில்களை உதறி எறிந்துவிட்டு ஆசிரியத் தொழிலை நாடி ஓடி வருகிற அளவுக்கு அந்தத் தொழிலின் ஊதியம் உயர்ந்தாக வேண்டும். "உயர்த்தத்தான் வேண்டும்—உயர்த்தத்தான் விரும்புகிறோம்—உயர்த்தினால்தான் நாடும் சமுதாயமும் உயரும்—உண்மைதான் அத்தனையும்—ஐயம் இல்லை துளியும். ஆனால் உயர்த்துவதற்குத் தேவையான பணவசதி இல்லையே அரசாங்கத்திடம்—யாது செய்வோம் நாங்கள்?" என்று, நாடாளும் அமைச்சர்கள் பஞ்சப் பாட்டுப்பாடுவதில் பயன் இல்லை. ஆசிரியர்களின் ஊதியங்களை உயர்த்துவதற்குத் தேவையான பணத்தை எப்பாடு பட்டேனும் அமைச்சர்கள் திரட்டியாக வேண்டும்.

உரிய அளவுக்கு ஊதியத்தை உயர்த்தாமல், ஆசிரியர்கள்மீது புகழ் உரைகளைப் பொழிவதாலோ, பாராட்டு மாலைகளைச் சூட்டுவதாலோ, வாழ்த்துரை வெண்பாக்களை வாசிப்பதாலோ, விருதுகளையும் சான்று இதழ்களையும் வழங்குவதாலோ, நிலைமை சிறிதளவும் திருந்திவிடாது.

மிகக் குறைந்த ஊதிய நிலையில் ஆசிரியர்களை வேதனைப்பட வைத்துவிட்டு, இவ்வளவு குறைந்த ஊதியம் தானா இவர்களுக்கு என்று அவர்கள் மீது பரிதாபப்படுகிற நிலையில் மாணவர்களை வைத்துவிட்டு, மாணவர்களிடையே ஒழுங்கு முறையும் கட்டுப்பாடும் அப்பழுக்கின்றிக் காட்சி தரவேண்டும் என்று எதிர்பார்த்தால் அது எப்படி முடியும்?

போதிய முன்யோசனை இன்றி—திடீர் திடீரென்று—அவசரக் கோலத்தை அள்ளித் தெளித்த கதையாகக் கல்வித் துறையில் அடிக்கடி மாறுதல்கள் செய்யப்படுவது, சென்ற பதினைந்து ஆண்டுகளில் பலமுறை நிகழ்ந்திருக்கிறது. படிக்கவேண்டிய பாடங்களின் எண்ணிக்கையிலும் தன்மையிலும் தரத்திலும் வகையிலும் இவ்வாறு மாறுதல்கள் அடிக்கடி செய்யப்பட்டதன் விளைவாகக் கல்வித் துறையில் ஒரு வகைக் குழப்பமும் நிச்சயமற்ற தன்மையும் உருவாகி

விடுகின்றன. இத்தகைய நிலையில் மாணவர்களிடையே கட்டுப்பாடற்ற போக்கு உருவாவது இயற்கையே அல்லவா?

மாணவர்களின் கட்டுப்பாடின்மைக்கு உரிய மற்றொரு காரணம், இக்காலப் பெற்றோர்களிற் பலர், தம் பிள்ளைகள் மீது செலுத்தவேண்டிய அளவு கவனத்தைச் செலுத்தாமல் இருப்பதாகும். தம் பிள்ளைகள் ஒழுங்கான முறையில் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரிக்குச் செல்கிறார்களா—நாள்தோறும் பாடங்களைத் தவறாமல் படிக்கிறார்களா—வகுப்புகளில் ஆசிரியர்கட்கு அடங்கி நடக்கிறார்களா—ஒவ்வொரு தேர்விலும் போதிய மதிப்பெண்கள் பெறுகிறார்களா என்பனவற்றையெல்லாம் நன்கு கவனித்து, தக்க முறையில் தங்கள் பிள்ளைகள் நடந்து கொள்ளவில்லையென்றால் அவர்களை நயத்தாலும் பயத்தாலும் திருத்திச் செலுத்தவேண்டிய பொறுப்பு, பெற்றோர்களின் உரிமைமட்டுமன்று, கடமையும் ஆகும். ஆனால் இக் காலப் பெற்றோர்களிற்பலர், இக்கடமையைத் தட்டிக் கழித்து விடுகிறார்கள்; ஏனோதானோவென்று இருந்து விடுகிறார்கள். இத்தகைய நிலையில் கட்டுப்பாடற்ற போக்குக்கு மாணவர்கள் இரையாவதில் வியப்பு ஏது?

மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் சிறந்த எடுத்துக் காட்டுகளாக விளங்கி, உயர்ந்த நெறியைத் தங்களுடைய சொல்லாலும் செயலாலும் பரப்பவேண்டிய கடமை படைத்த நகராட்சி மன்ற உறுப்பினர்கள் — பாராளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் — அமைச்சர் பெருமக்கள்—அரசியல் தலைவர்கள் ஆகிய முன்னணியினரே, பல சமயங்களில், மேற்படி மன்றங்களிலேயே, முறையும் நெறியும் தவறி நடந்து, அப்படி நடப்பதற்குத் தேவையான ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தங்களை அறியாமலே இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் அளித்து வருகிறார்கள். "அத்தகைய பெருமக்களே தவறி நடக்கும்போது நாம் ஏன் தவறி நடக்கக்கூடாது? பாராளுமன்றக் கூட்டங்களிலேயே அவர்கள் அவைத் தலைவருக்கு அடங்க மறுத்துக் குழப்பமும் கலகமும் விளைக்கும்போது வகுப்பு அறைகளில் நாம் ஆசிரியர்கட்கு அடங்க மறுத்து வீதிகளில் இறங்கிக் குழப்பம் விளைவிப்பதில் என்ன தவறு?" என்றெல்லாம் மாணவர்களின் சிந்தனை தவறான திசையில் வெள்ளமெனப் பாய்ந்து ஓடத் தொடங்கிவிடுகிறது. மாணவ சமுதாயத்தை இன்றைய தினம் ஆட்டிப்படைக்கிற கலக மனப்பான்மைக்கு உரிய மிக முதன்மையான ஒரு காரணம் இது. முன் ஏர் செல்லும் வழியில் தானே பின் ஏர் செல்லும்? மூத்தவர்கள் காட்டும் திசையில்தானே இளையவர்கள் நடப்பர்? அறிந்தவர்களும் தெரிந்தவர்களுமே தவறு செய்யும்போது, சிறியவர்களும் தவறு செய்வதே தான் முறை என்று தவறாக எண்ணிவிடுவது இயல்புதானே?

"மாணவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்ளவேண்டும் என்று நாட்டின் தலைவர்கள் விரும்பினால், அவர்களும் கண்ணியமான முறையில் நடந்துகொண்டு மாணவர்களுக்கு எடுத்துக்காட்டாகத் திகழவேண்டும். தூய்மையான நேர்மையான வாழ்க்கைக்குத் தலைவர்கள் எடுத்துக்காட்டாக விளங்குவது இன்றியமையாதது ஆகும். கலவரங்களுக்கு வழி கோலக்கூடிய கிளர்ச்சி வழியைத் தலைவர்கள் மேற்கொண்டால் அதன்பின் மாணவர்களைக் குறைகூறுவதில் பயன் இல்லை" என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள், ஆமதாபாத் நகரில், 18—10—66 அன்று, குஜராத் வித்தியா பீடத்தின் பட்டம் அளிப்பு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டுள்ளார். அன்னாரின் இக்கருத்துரை நாட்டின் தலைவர்கள் பலரின் தவறான போக்கைத் தடுத்து நிறுத்தும் என்று நம்புகிறோம்.

1. ஒவ்வோர் ஆசிரியராலும் கவனிக்கப்படவேண்டிய மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைத்தல்.

2. ஆசிரியர்களின் ஊதியத்தைக் கணிசமாக உயர்த்துதல்.

3. மாணவர்களின் மீது பெற்றோர்கள் உரிய கவனத்தை உரிய முறையில் செலுத்துதல்.

4. நாட்டின் தலைவர்கள் கண்ணியமும் ஒழுக்கமும் நாணயமும் மிகுந்தவர்களாக நடந்து கொள்ளுதல்.

5. கல்வி நிலையங்களில் மாணவர்களுக்கு நியாயமாகச் செய்து தரப்படவேண்டிய வசதிகளைத் தட்டாமல் தயங்காமல் செய்து தருதல்.

ஆகிய இந்த ஐந்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமானால், மாணவர்களிடம் வீறிவெடித்துக் காணப்படுகிற கட்டுப்பாடற்ற போக்கு தானாகவே மறைந்துவிடும் என்பது உறுதி.

எரிகிற கொள்ளியை அகற்றிவிட்டால், கொதிக்கிற உலை தானாக அடங்கிவிடும் என்பதில் ஐயம் ஏது?

'சர். சி. பி. ஆர்.' சாகவில்லை!

மனிதனை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு சாரார் இருந்தும் இல்லாதவர்; மற்றொரு சாரார் இறந்தும் இருப்பவர். முதல் வகையைச் சார்ந்தவர் தமக்காக வாழ்ந்தவர் பட்டியலில் சேர்ந்து விடுவர்; இரண்டாம் வகையைச் சார்ந்தவர் பிறருக்காக வாழ்ந்தவர் பட்டியலில் இணைந்து விடுவர். இப்படி இணைந்து விடும் எவருக்கும் எப்போதும் சாவென்பது கிடையாது.

ஊருக்கு, நாட்டுக்கு, உலகுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட எவருக்குமே அழிவென்பது இல்லை. அப்படிப்பட்டவரெல்லாம் அழியா உடம்பைப் பெற்றவராவர். அதனால்தான் ஏசுவும் புத்தரும், ஆபிரகாம் லிங்கனும் அண்ணல் காந்தியும், சாக்ரடீஸும் விவேகானந்தரும், எமர்சனும் எடிசனும், தாகூரும் அடிகளும் இன்னும் பிற கலைஞர்களும் கவிஞர்களும் இன்னமும் இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்நிலவுலகம் தோன்றிய காலத்திலிருந்து இக்காலம் வரையிலும் பிறந்து இறந்தவரைக் கணக்கெடுக்க முயன்றால் யாராலும் முடியாத ஒரு பயங்கரக் கூத்தாக முடியும். ஆனால் அவர்களிலே எத்தனை பேர்கள் நம் மனத்திலே பதிந்திருக்கின்றனர்? ஒரு சிலரைத் தவிர மற்றவரெல்லாம் ஊர் பேர் தெரியாமல் மண்ணோடு மண்ணாகிப் போய் விட்டார்கள். வாழ்ந்ததற்கு விளக்கமின்றி, 'இப்படி ஒரு மனிதன் இங்கு இருந்திருப்பானா?' என்ற நினைப்புக்குக் கூட இடமின்றி, எலும்பும் கொஞ்சம் சதையும், அவ்விரண்டையும் மூடும் தோலும் கொண்ட மனிதர்களாக வாழ்ந்து விட்டுப் போயிருக்கிறார்கள். அப்படி வாழ்ந்து சென்றவர்களுக்கு மத்தியிலேதான், 'இப்படி வாழ்கிறார்களே, அப்படி வாழ முயலக் கூடாதா?' என்று எண்ணி நொந்தவர்கள் இருந்தார்கள்; அவர்கள் தாம் இப்போதும், இனி, எப்போதும் இருப்பவர்கள்! அதாவது, அழிந்தும் அழியாமல் நாம் நினைக்கும் போதெல்லாம் நம் பக்கத்தில் துணையாக இருந்து வருபவர்கள்......

எத்தனையோ தலைமுறைகளுக்கு முன்னே தோன்றிய வள்ளுவப் பெருந்தகை இன்னமும் நம்மிடையே வாழ்கிறார். ஆனால் அவர் காலத்திலே வாழ்ந்த மற்றவர் பெயரைக்கூட இக்காலத்தில் நாம் அறிய முடியவில்லை. காரணமென்ன? அவர்கள் வாழ்ந்த வாழ்வின் பயன் அது! எட்டி மரம்போல் இருந்து விட்டு வாழ்வை

முடித்துக் கொண்டவரை யார்தான் நினைவில் வைத்துக் கொள்ள முடியும்?

ஒரு குடும்பத் தலைவன் இறந்து விட்டால் அவனைச் சார்ந்தோர் இருக்கும் வரையில் அவன் பெயர் இருக்கும். அதன் பிறகு—? அதாவது, ஒருவர் பதவியில் உள்ளவரைப் 'பூமானே, சீமானே!' என்று போற்றுகின்றனர். அந்தப் பதவியை அவர் இழந்துவிட்டால் அவரை யார் நினைத்துப் பார்க்கிறார்கள்? எனவே பதவிக்கும் தனக்கென்று வாழ்பவருக்கும் எந்த ஒரு வேற்றுமையும் எப்போதும் இருந்ததில்லை. அப்படிப்பட்டவரை நாம் நினைத்துப் பார்க்கவும் வழியில்லை. ஆனால் தமக்கென்று, தம் குடும்பத்துக்கென்று இல்லாமல் பிறருக்கென்று உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்தவர், ஆலமரம் போல் பலருக்குப் பயன்பட்டவர், நிலவைப் போல் ஒளி சிந்தியவர், மழையைப் போல் பயன்பட்டவர் உடம்பால் அழிந்தவரானாலும் உள்ளத்தால் அவரவர் செய்த பணியால் அழியாதவராகின்றார். அப்படி அழியாத பலருள் அழிந்து விட்டதாகக் கருதப்படும் சர். சி. பி.யும் ஒருவர்.

இந்தத் தேசம் வெள்ளையனுக்கு அடிமையாக இருந்த காலத்தில் பிறந்தவர்; அந்த அடிமை விலங்கு அறுபட்டு, மக்களாட்சி எங்கும் நிலவும் இக்காலத்தில் பிறவா வரம் பெற்றார்......இந்தக் குறுகிய ஆண்டுகளுக்குள் அவர் செய்திருக்கும் செயற்கரிய பணிகள் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கனவாகும். அழியும் உடம்பை மையமாக வைத்துக்கொண்டு அழியாப் புகழுக்கான பணிகளை அயராது செய்தார். அவர் தொட்டது எதுவுமே துலங்காமல் போனதில்லை; பட்ட மரத்தையும் பசுந்தளிராக்க முயன்றவர்; வெற்றியும் பெற்றவர். நிர்வாகத் துறையிலும், கல்விச் செல்வத்திலும், நாவன்மையிலும் சிறந்து விளங்கிய டாக்டர் சர். சி.பி. அரசியலில் அடக்கமாக நகர்ந்தவர். ஆனால் அரசியல் விஷயங்களில் எறும்பைப் போல் செயலாற்றியவர்.

இக்கால நிலையில் பெரும்பாலோர் பதவியே தமக்குப் பெரிதாகக் கருதி, அதனையே ஆண்டவனாகவும் எண்ணி வழிபடுகின்றனர். ஆனால் சர். சி. பி. அப்படி எண்ணி வழிபட்டவரல்லர். சத்தியப் போருக்காகச் சதிகாரர்களால் தரப்பட்ட பதவியை, அந்தப் பதவியை ஏற்ற பதினைந்தே பதினைந்து நாட்களில் தூக்கி எறிந்தவர்.

பழங்காலப் பழக்க வழக்கங்களில் சர். சி. பி.க்கு அதிக நம்பிக்கை உண்டு. அதேசமயத்தில் உயர்ந்தவர்—தாழ்ந்தவர் என்னும் மூட நம்பிக்கையில் அதிக வெறுப்புடையவர். இறைவன் முன்னே இரண்டு பிரிவார் இருப்பதில்லை; அங்கு அனைவரும் சமம். இந்தக்

கருத்து ஒரு முப்பது ஆண்டுகளுக்கு முன் இருந்ததில்லை. அப்போது சர். சி. பி. திருவாங்கூர் சமஸ்தானத்துக்கு திவானாக இருந்தார். இருந்தாற் போலிருந்து ஒரு பிரகடனத்தை வெளிப் படுத்தினார். 'உயர்ந்தவர் மட்டுமல்ல, இன்று முதல் தாழ்ந்தவ ரென்று கருதப்பட்டவருங்கூட கோவிலுக்குச் செல்லலாம்; ஆண் டவனைக் காணலாம்!' என்ற பிரயோகமே அது. இதற்கு அண்ணல் காந்தியின் முழு ஆதரவும் பக்கத் துணையாக இருந்தது.

அவர் இந்தப் பெரும் புரட்சியைச் செய்து விட்ட பிறகுதான் இந்தியா முழுவதிலும் ஆலயப் பிரவேசம் மும்முரமாகியது. இந்தப் புரட்சியைத் துவக்கிய போது அவருக்கு ஏற்பட்ட ஆபத்து கொஞ் சமல்ல...பிறருடைய நல்வாழ்வுக்காகத் தம்மை எதிர் நோக்கி வந்த அத்தனை இடையூறுகளையும் தைரியத்தோடு ஏற்றுக்கொண்டு எடுத்த காரியத்தில் வெற்றி கண்டார். அப்படிப்பட்ட நெஞ்சுரம் வாய்ந் தவர். அதுமட்டுமல்ல, சர். சி. பி. சாகும் மனிதராக இருந்திருப் பாரேயானால் மேட்டூர் அணையையும் பைகாரா நீர்வீழ்ச்சியையும் நம்மால் காணமுடியாமல் போயிருக்கும். அவ்விரண்டும் அவரது அப்பழுக்கற்ற சிருஷ்டிகள்! ஆங்கிலேயரின் எதிர்ப்புக்களுக்கு அஞ்சாமல் அவ்விரண்டையும் தோற்றுவித்தார். அதனால் இன்று எத்தனையோ ஊர்கள் உயிர் பெற்றிருக்கின்றன; தொழில் துறை கள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

பாடுபட்டவர் அவர்; அதன் பலனை அனுபவிப்பவர் நாம்.

ஒரு சாதாரண வழக்கறிஞராக வாழ்க்கையை ஆரம்பித்த சர். சி. பி., நிர்வாகத் துறைகளில் உறுப்பினராகவும், திருவாங்கூர் திவானாகவும், பல்கலைக் கழகங்களில் உப-அத்யட்சகராகவும் விளங்கிச் செய்த ஒவ்வொரு பணியும் குன்றின் மீதிட்ட விளக் கென்று சொன்னால் மிகையாகாது. அப்படிப்பட்ட ஒரு மேதை மறைந்தார் என்பது பொருந்தாக் கூற்று.

அவர் செய்த பணிகளில் பல மறைந்தாலும் சில மறைவதற்கு முடியவே முடியாது! மேட்டூர் நீர்த்தேக்கமும், பைகாரா மின் சார நிலையமும், ஆலயப் பிரவேசமும் உள்ள வரையில், சர். சி. பி. சாகவில்லை; அவர் வாழ்கிறார்' என்று துணிந்து சொல்லலாம்.

சாவு, சாதாரணமானவருக்கு; செயற்கரிய செய்த பெரிய வருக்கல்ல என்பதை உணராதோர் உணர்தல் நலம்.

—வே. கபிலன்

ஜப்பானிய அற்புதம்

[செஸ்ட்டர் போல்ஸ்]

1945 ஆகஸ்ட் 14-ந் தேதி பசிபிக் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டபோது, ஜப்பான் குழப்பத்தில் ஆழ்ந்திருந்தது.

ஜப்பானிய நகரங்கள் அழிந்து விட்டன. போக்குவரவு குலைந்து விட்டது. மக்கள் மனமுடைந்து நின்றனர். தொழில் திறன் போருக்கு முந்தியிருந்த நிலைகளோடு ஒப்பிடுகையில் கடுகாகக் குறுகி விட்டது.

இருபத்தோர் ஆண்டுகள் கழித்து, தோல்வியினால் ஏற்பட்ட குழப்பம், சோர்வு இவற்றினின்றும் ஜப்பான் விடுபட்டு, பொருளாதார உற்பத்தியில் அமெரிக்கா, ரஷ்யா, மேற்கு ஜெர்மனி ஆகியநாடுகளை அடுத்து நான்காவது இடத்தைப் பெறும் நிலைக்கு வளர்ந்தோங்கியுள்ளது.

உள்நாட்டில் அறவே இரும்புக் கனி இல்லாதிருந்தும், இரும்புக் கலப்பற்ற உலோகங்கள், பெட்ரோலியம் இவை மிகச் சொற்ப அளவுகளிலேயே இருந்த போதிலும், முன்பு ஒருபோதுமில்லாத படி ஜப்பானியப்பொருளாதாரம் ஆண்டுக்குப் பத்துச் சதவீதம் என்ற விகிதத்தில் வளர்ந்து வந்துள்ளது.

இன்று பிரான்ஸ், பிரிட்டன் அல்லது இத்தாலியைவிட அதிகமாக ஜப்பான் எஃகு உற்பத்தி செய்கிறது; உண்மையில் அது அமெரிக்காவுக்கு எஃகு ஏற்றுமதி செய்து வருகிறது.

உலக மார்க்கெட்டுகள் அனைத்திலும் வாடிக்கைக்காரர்களைக் கவர்வதிலும், அந்நியச் செலாவணி சம்பாதிப்பதிலும் ஜப்பானிய ஏற்றுமதிகள் அபாரமாக வெற்றியடைந்துள்ளன.

உலகில் வேறெந்த நாட்டிலுமுள்ள குடியானவர்களைக் காட்டிலும் ஜப்பானியக்குடியானவர்கள் ஒரு ஏக்கரில் அதிக உணவு தானியம் விளைவிக்கின்றனர்.

இந்தப் பொருளாதார முன்னேற்றத்தின் பலன்களில் பெரும் பகுதியும் ஜப்பானியமக்களுக்குக் கிடைத்துள்ளது. நாட்டுப்புறப் பகுதிகளில் கூட பெரும்பாலான ஜப்பானியர்கள் இன்று டெலிவிஷன், சலவை இயந்திரங்கள் உள்பட தற்கால வாழ்க்கையின் மற்றவசதிகளும் பெற்றுள்ளனர்.

மாபெரும் இந்தப் பொருளாதார வெற்றி எப்படிக் கிடைத்தது ?

ஒரு வலுவான அடிப்படையில் ஜப்பான் தன் பொருளாதார வளர்ச்சியைத் தொடங்கியது; அதன் மக்களில் அநேகமாக நூற்றுக்கு நூறு பேர் படித்தவர்கள்; அதன் தொழிலாளர்கள் உலகிலேயே மிகவும் திறமையுள்

ளவர்களுக்கு இணையானவர்கள்; ஜப்பானியத் தொழில் நிர்வாகிகள் காரியவாதிகள்; வளர்ச்சியே நோக்கமாகக் கொண்ட புதுமைகள் கண்டுபிடிப்பவர்கள்.

இந்த உறுதியான அடிப்படையோடு ஜப்பானியர்கள் பெரிய புதிய அம்சங்களையும் சேர்த்துக் கொண்டனர். இவற்றில் மிக முக்கியமானவற்றில் ஒன்று, 1947ல் நடப்புக்குக் கொண்டு வரப்பட்ட நிலச்சீர்திருத்த ஏற்பாடு இது. ஒரு குடும்பம் 7½ ஏக்கர் நிலம் தான் வைத்திருக்கலாமென நிலவுடமைக்கு வரம்பு கட்டியது.

பலன்: ஜப்பானிய நாட்டுப்புறக் குடும்பங்களில் 94சதவீதம் குடும்பங்களுக்கு நில உடமை உண்டாயிற்று; நிலம் அவர்களுக்குச் சொந்தமானது உரிய ஊக்கத்தையளித்தது; இது இன்றைய ஈடு இணையற்ற அளவுக்கு விவசாயம் வளர்ந்தோங்கச் செய்தது.

அதே சமயத்தில் விநியோகச் செலவுகளைக் குறைக்கவும்; மலிவான விலையில் ரசாயன உரங்களும், பூச்சி கொல்லிகளும், விவசாயக்கருவிகளும் வழங்கவும் மிகுந்த திறமையுள்ள கூட்டுறவு விற்பனை நிலையங்களோடு கூடிய, நாட்டுப்புறக் கடன் வசதி முறைகள் ஏற்பட்டன.

தொழில் துறையில் பெரிய, சிறிய நிறுவனங்கள் இரண்டுமே விரைவாக வளர்ந்தோங்குவதற்குத் தாராளமான வரிச் சலுகைகள் ஊக்கம் அளித்தன. தனியார் துறையால் முடியாதபோது அல்லது அதுசெயல் புரிய விரும்

" ஆரம்பக் கல்வி "
ஆபீஸ்.
94-95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-50

ரிக்கார்ட் ஷீட்டுகள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பிராவிடெண்ட் பண்டு கட்டும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 1-00

வருடாந்திர பிராவிடெண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

Form of Certificate of income
வருமான நற்சாட்சிப் பாரங்கள்
(ஆங்கிலம்) 100 ரூ. 2-00

தபால் செலவு பிரத்யேகம்

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் பாரங்களை அனுப்ப தபால் செலவு:

25 பாரங்களுக்கு 14 nP.
50 பாரங்களுக்கு 26 nP.
75 பாரங்களுக்கு 41 nP.
100 பாரங்களுக்கு 50 nP.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

பாதபோது, உற்பத்தி வசதிகளை நிறுவி நடத்த அரசாங்கம் தயங்கவில்லை.

அந்நிய முதலீடு விரும்பி வரவேற்கப்பட்டது; எனவே அது ஏராளமாக விரைந்து வந்து குவிந்தது. அதே சமயத்தில் ஏற்றுமதி மார்க்கெட்டுகள் உன்னிப்பாக ஆராயப்பட்டன. போட்டியிடக் கூடிய நிலைமைகளுக்கு உற்பத்திப் பொருட்கள் திருத்தியமைக்கப்பட்டன; வெளி நாடுகளில் அவற்றை விற்பதற்குத் தீவிர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

குடும்பக்கட்டுப்பாடு எவ்வளவு முக்கியம் என்பது உணரப்பட்டது; இன்றுள்ளது போன்று ஆண்டுக்கு ஒருசதவீதத்துக்கும் குறைந்த அளவுக்குப் பிறப்பு விகிதம் மட்டுப்படுத்தப்பட்டது.

ஜப்பான் செய்ததை மற்ற ஆசிய நாடுகளும் செய்ய முடியும். வழி தெளிவானது என நான் கருதுகிறேன்; அது வருமாறு:

(1) கல்வி, விவசாயம், மக்கள் தொகைக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு முதலிடம் அளித்தல்;

(2) உழும் நிலம் அவர்களுக்குச் சொந்தமாகும் என்ற உத்தரவாதத்துடன் கூடிய, குடியானவர்களில் மிக அதிகப்பட்சம் பேர் முழு ஆற்றலுடன் பாடுபடவகை செய்யும் நிலச் சீர்திருத்தம்.

(3) நிலச் சூது போதத்தைக் கடுமையாகக்கட்டுப் படுத்துவதும் அதிக வேலைகள் அளிப்பதோடு உற்பத்தியையும் பெருக்கும்புதிய முதலீடுகளுக்குத் தாராளமான வெகுமானம் அளிப்பதுமான ஒரு வரி விதிப்பு முறை.

(4) வளர்ச்சிக்கு வழிகாட்டி ஊக்கமளிப்பதும்; மேலும், பொருளாதார நீதியும், வாய்ப்பு உரிமையும் இடையுறுமல் எல்லா மக்களுக்கும் கிடைக்க உறுதி செய்வதுமான ஒரு அரசாங்கம்.

(5) ஆக்கமான தனியார் முயற்சிக்கு இடையூறாக அதிகார வர்க்கத் தடைகளை ஒழித்தல்.

செல்லரித்துப் போன பொருளாதாரக் கோட்பாடுகளைத் தூக்கி எறியவும், மக்களின் வளமைக்கும் நல்வாழ்வுக்கும் காரியத்தில் கண்ணாகப் பாடுபடவும் உறுதிபூண்ட ஆசிய நாடு ஒன்று முன்னுக்கு வந்த ஈடு இணையில்லாத வரலாறு இது.

புதிய உலகங்கள்

"நம்முடைய உலகத்தைப் போல், புல்—பூண்டு-மரஞ் செடிகள்—மனிதர்கள் உள்ள பத்து இலட்சம் உலகங்கள் இந்த அகிலத்தில் இருக்கின்றன" என்று, அமெரிக்க வானாராய்ச்சி அறிஞர் டாக்டர் ஹார்லோ ஷார்ப்லி, நியூயார்க்கில் அறிவித்தார்.

"மக்கள் வாழும் உலகம் நம்முடையது மட்டுந்தான் என்று யாரும் நினைத்துவிட வேண்டாம்" என்று அவர் கூறிய கருத்தை, வேறு மூன்று அமெரிக்க விஞ்ஞானிகளும் ஒத்துக் கொண்டார்கள்.

ஆசிரியகர்ளின் சம்பளத்தை அதிகரிக்க திட்டக் கமிஷன் குழு யோசனை

புதுடில்லி, செ, 29— கல்வித் திட்டத்தில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காண வேண்டுமானால், தாமதமின்றி ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்று திட்டக் கமிஷனின் கல்விக் குழு ஏகமனதாக அபிப்ராயம் தெரிவித்துள்ளது.

திட்டக்கமிஷனின் இக்குழு நான்காவது திட்டத்தை விரிவாக விவாதித்தது. ஆரம்ப, செகண்டரி பள்ளிக் கூடங்களில் உள்ள ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தும்படி ராஜ்ய சர்க்கார்களுக்குத் தூண்டுதல் தர நான்காவது திட்டத்தில் ஏதாவதுசெய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது.

திட்டத்துடன் சம்பந்தப்படாத வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட வசதிகளை ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்துவது சம்பந்தமாக ராஜ்யங்களின் திட்ட வசதிகளையும் திட்டவேலைகளுடன் சம்பந்தப்படாத வசதிகளையும் பற்றி மறு பரிசிலனை செய்யும்படி திட்டக்கமிஷனை இக்குழு கேட்டுக் கொண்டது.

ஆரம்ப, செகண்டரி பள்ளிக் கூடங்களில் ஆசிரியர்களின் சம்பளங்கள் குறைவாயிருக்கிறது. ஆசிரியர்களின் சம்பளங்களை, உயர்த்துவதற்கு ஏராளமான பணம் செலவாவதால் ராஜ்ய சர்க்கார்கள் அவற்றை உயர்த்த முடியவில்லை என்று பொதுவாகக் கருதப்பட்டது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு அதிகமான குறைந்தபட்ச ஆரம்ப சம்பளம் அளிக்கப்பட வேண்டும் என்று குழு சிபாரிசு செய்துள்ளது.

ஆசிரியர்களின் சம்பளம் சம்பந்தமாக கல்விக் கமிஷன் செய்துள்ள சிபாரிசுகளை அமல் நடத்துவதாயிருந்தால் வருஷத்துக்கு ரூ. 160 கோடி அல்லது நான்காவது திட்ட காலம் முழுவதுக்கும் ரூ. 800 கோடி தேவைப்படும் என்று டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் விளக்கினார். நான்காவது திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கியுள்ள ரூ. 1210 கோடியிலிருந்து இந்தத் தொகையை ஒதுக்குவதாயிருந்தால் மற்ற வேலைகளுக்குப் பணமேயிராது என்றார்.

ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தவும், வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்யவும், சமுதாயம் பொறுப்பேற்க வேண்டும் என்று டாக்டர் ராவ் கூறினார். எனினும் குழுவின் சிபாரிசுகள் கவனத்தில் கொள்ளப்படும் என்றார்.

GOVERNMENT CIRCULARS

We publish the following orders of the Government as a rusult of the many letters we received from the various districts.

GOVERNMENT OF MADRAS

Education and Public Health Department.

G. O. No. 2801, Education, dated 20th November 1962.

Education—Teachers Pension Scheme—Extenion of family Pension Scheme to teachers in aided and local body schools—Orders issued :

Read the following :

G. O. Ms. No. 909 Education, dated 24th April 1961.

Letter from the Director of Public Instruction, dated 30th November 19-1, No. 4756-B 10/61.

Letter from the Accountant General, dated 17th July 1962 November 1962, No. P. F. I/T/3-6/62-63/311.

Order :—No. 2801 Education, dated 20th November 1962.

The Government after a careful consideration of the proposals submitted by the Director of Public Instruction, have decided that the concession of Family Pension in the Madras Liberalised Pension Rules, 1960, should be extended to all teachers employed in aided and local body schools including those who are already enjoying the benefit of the Teachers' Pension Scheme.

2. Under the Madras Liberalised Pension Rules, 1960, for Government servants including teachers in Government service, the family pension is one half of the superannuation pension admissible. In respect of teachers in aided local body schools, the present maximum superannuation pention is calculated on one-fourth of their pay as against 30/80 in the case of teachers in Government service. In view of this, the Director of Public Instruction has pointed out that a family pension based on half the superannuation pension would be very small in the case of teachers in aided and local body schools and has suggested that a higher rate may be allowed. Under the contributory Provident Fund Scheme, applicable to teachers in aided school. one-third of the total of the contribution of the teachers and managements and interest thereson at it stands on the

day of the closure of the Fund is given as Government contribution to the Fund. The teachers of Governmet service coming uuder the liberalised Pension Rules are not however eligible for any Provident Fund benefits. In view of this lt would not be possible to combine both Provident Fund and family Pension benefits at rates applicable to Government servants in respect of teachers in aided and local body schools. The teachers in aided and local body schools cannot be allowed to get larger pensionary benefits than teaehers in Government service. The Goverument consider that it would be sufficient if it is ensured that the family pension to be allowed to the families of teachers in aided and local body schocls together with the pension equivalent of the Government Contributions to their Provident Fund, do not exceed the family pension and pension equivalent of the Death cum Retirement Gratuity admissible to the families of deceased tcachers in Government schools. On this basis the family pension admissible to a teacher in an aided or local body school works out to roughly one-half of that admissible to the family of a deceased teacher in Government service with the same length of service.

3. The Government have decided that the family pension in respect of a teacher employed in an aided or local body school should be accordingly be fixed at one-half of the family pension admissible to a teacher in Government service with the same length of service.

4. As in the case of Government servants, the family pension will be granted to the family of a teacher in aided or local body school after the completion of not less than 20 years of qualifying service, for a period of 10 years or 5 years from the date of superannuation, whichever is less. The definition of ' family ' shall be as stated in the Madras Liberalised Pension Rules, 1960.

5. The above order will take effect from 1st April 1962.

6. This order issues with the concurrance of Finance Department-Vide its U. O. No. 1286-77/Pen.*l*-62-1, dated 16 Nov. 1962.

(By order of the Governor)

K. SRINIVASAN,

SECRETARY TO GOVERNMENT.

இலக்கியத்தில் குருவி

[கே. எஸ். மகாதேவன் பி. எஸ்ஸி., எம். ஏ.]

தமிழ்ப் புலவர்கள் அடைமொழி எதுவும் கொடாது 'குருவி' என்று சொல்லுமிடங்களிலெல்லாம் சிட்டுக்குருவியினையே குறிக்கின்றன என்று நாம் கொள்ளலாம். சிட்டுக் குருவி எப்பொழுதும் எங்கும் எளிமையாகக் காணக்கூடிய ஒரு பறவையினம். சிட்டுக் குருவியின் வேகத்தை நாம் நன்கு உணர்ந்திருக்கின்றோம். இன்றும், வேகமாக ஓடும் ஒருவனைப் பார்த்து "சிட்டாகப் பறக்கின்றான்" என்று கூறுகிறோம். சிட்டுக் குருவி எப்பொழுதும் விடுதலை உரிமையோடு 'துறுதுறு'வென்று ஓடியாடிக்கொண்டிருப்பதுபாரதியாரின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்து ஒரு கவிதையையே உருவாக்கி நாட்டிற்கு அளித்து விட்டது.

"விட்டு விடுதலையாகி நிற்பா
யிந்தச் சிட்டுக் குருவியைப்
போல..."

என்ற பாடல் விடுதலை என்பது உலகத்து உயிர்கள் அனைத்திற்கும் இயற்கையால் அளிக்கப் பட்டுள்ள ஒரு பிறப்புரிமை என்பதை அழகாக எடுத்துக் கூறுகிறது.

எட்டுத் திசையிலும்

சிட்டுக் குருவியின் விடுதலை வேட்கையை எடுத்துக் கூறும் பாரதியார் இந்தத் திசையில் செல்லலாம். இந்தத் திசையில் செல்லக் கூடாது என்ற வரையறையின்றித் திசைகள் எட்டிலும் அவை திரிந்து பறக்கின்றன என்ற உண்மையை "எட்டுத் திசையும் பறந்து திரிகுவை" என்று கூறுகிறார். உண்மையில் சிட்டுக் குருவிகள் உலக உருண்டையின் மேல் உள்ள எல்லா நாடுகளிலும் பரவி வாழ்ந்து வருகின்றன. சிட்டுக் குருவிகளில் ஏறத்தாழ 92 இனங்களும் 600 வகைகளும் இருக்கின்றன. உலகத்தில் எத்தனையோ பறவை இனங்கள் எண்ணிக்கையில் குறைந்து இறுதியில் இல்லாமல் மறைந்துவிட்டன. இன்னும் சில பறவைகள் மறைந்துகொண்டு வருகின்றன. ஆனால் சிட்டுக் குருவிகளோ எல்லாச் சூழல்களிலும் வரவர பெருகிக்கொண்டே வருகின்றன. இடத்திற்கும், தட்பவெப்ப நிலைக்கும் ஏற்றபடி தங்கள் பழக்க வழக்கங்களையும் உணவு உறைகளையும் மாற்றி அமைத்துக்கொள்வதில் சிட்டுக் குருவிக்கு இணையாகவேறு எந்தப்

பறவை இனத்தையும் சொல்ல முடியாது. மனிதன் சென்று குடியேறிய புதிய தீவுகளிலெல்லாம் சிட்டுக் குருவிகளும் குடியேறி வாழ்ந்து வருகின்றன. மனிதன் இடத்திற்கேற்பத் தன் உணவை மாற்றிக் கொண்டு வாழ்வது போன்று சிட்டுக்குருவியும் தம் உணவினை மாற்றிக்கொண்டு வாழ்கின்றது.

வீட்டுச் சிட்டும், காட்டுச் சிட்டும்

சிட்டுக் குருவிகளில் ஒருவகை வீடுகளில் வசிக்கும் மனிதர்களுடன் நெருங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இவற்றை 'மனையுறை குருவி' என்று தமிழ்ப் புலவர்கள் அழைக்கின்றனர். ஆங்கிலத்தில் இதனை வீட்டுச் சிட்டு House Sparrow என்றழைக்கின்றனர். வீட்டுச் சிட்டு மக்கள் வாழும் வீட்டின் கூரைகளில் உள்ள இடங்களிலும் இருண்ட இடுக்குகளிலும்' கூடு கட்டிக் கொண்டு முட்டையிட்டுக் குஞ்சு பொரித்து வாழும். முற்றத்திலும் அடுக்களையிலும் சிதறிக் கிடக்கின்ற தானியங்கள், சமைத்த உணவுப் பொருள்கள், காய்கறிகள் ஆகிய எல்லாவற்றையும் இவை ஆவலோடு தன் அலகால் எடுத்துச் சென்று விழுங்கும். வீட்டில் சிட்டுக் குருவிகள் ஆணும் பெண்ணுமாகச் சேர்ந்து குழந்தைகளுடன் குடும்பம் நடத்துவதை "மனையுறை குரீஇ... இல்லிறைப் பள்ளித்தம் பிள்ளையொடு வதியும்" என்ற குறுந்தொகை அடிகள் அறிவிக்கின்றன. மேல் நாடுகளில் காணப்படும் சிட்டுக் குருவிகள் பல நிறங்களிலும் காணப்படுகின்றன. ஆனால், நம் தமிழ்நாட்டுக் குருவிகள் கருங்கோடுகள் பெற்று காப்பி போடி நிறத்தில் இருக்கின்றன. மேல் நாட்டுக் குருவிகளில் ஆணுக்கும் பெண்ணுக்கும் தோற்றத்தில் வேறுபாடு தெரிவதில்லை. ஆனால் இங்கு நம் நாட்டுக் குருவிகளில ஆணும் பெண்ணும் வேறுபாடின்றி "ஆம்பல் பூவின் சாம்பலன்ன கூம்பிய சிறகு" களைப் பெற்றிருந்தாலும், அவற்றை வேறுபடுத்தி அறிய ஒரு வழி உள்ளது. ஆண் குருவிகளின் கழுத்திற்குக் கீழ் (அணல்) கறுப்புநிறம் திட்டாக இருக்கும். பெண் குருவிகளுக்கு அவ்வாறு இருப்பதில்லை. இதனை நுட்பமாக அறிந்திருந்த நம் புலவர்கள் ஆண் குருவியைக் குறிக்கும் போது "கறை அணல் சேவல்" என்று குறிப்பிடுகின்றனர். இதனை "மனையுறை குரீஇ கறையணற் சேவல் பெருஞ்செய் நெல்லின் அரிசி ஆர்ந்து, தன் புன்புறப் பெடையொடு வதியும்" என்ற புறநானூற்று அடிகளில் காணலாம். சிட்டுக் குருவிகள் முற்றத்தில் காய வைத்திருக்கும் தானிய மணிகளைத் தின்று, தெருவில் படிந்து கிடக்கும் எருவினை அலகால் குடைந்து விளையாடிப் பின்னர் வீட்டில் அமைக்கப்பட்டிருக்கும் தம் கூட்டில் சென்று குஞ்சுகளுடன் மாலைக் காலத்தில் தங்கும் என்பதனைக் குறுந்தொகையில் வரும்,

"ஆம்பற் பூவின் சாம்பலன்ன
கூம்பிய சிறகர் மனையுறை
குரீஇ
முன்றிலுணங்கல் மாந்தி மன்
றத், தெருவின் நுண் தாது
குடைவன ஆடி, இல்லிறைப்
பள்ளித்தம் பிள்ளையொடு வதி
யும் புன் கண் மாலை"

என்ற அடிகள் விளக்குகின்றன.

குருவி சேர் குன்றம்!

காட்டுச் சிட்டுக் குருவிகளோ கட்டுக்கடங்காத நிலையில் கூட்டம் கூட்டமாகத் திரியும். மனிதரின் வீட்டு முற்றத்தைத் திரும்பியும் இவை பார்ப்பதில்லை. கழனி வெளிகளில் உழவன் விதைத்த விதைகளைப் பொறுக்கி உண்ணும். கழனி விளைந்தவுடன் உழவனையும் முந்திக்கொண்டு நெல் மணிகளை அறுவடை செய்யத் தொடங்கிவிடும். சிட்டுக் குருவிகள் உழவனுக்கு இவ்வாறு துன்பம் கொடுத்தாலும் ஒரு வகையில் அவனுக்குத் தோழனுகவும் இருக்கிறது. பயிரினங்களை அழிப்பதையே தொழிலாகக் கொண்டிருக்கின்ற பூச்சி புழுவினங்களுக்கெல்லாம் சிட்டுக் குருவியே எதிரி. காட்டுச் சிட்டுக்குருவிகள் கூட்டமாய்ச் சென்று மலையில் தங்கும் காட்சி காண்பதற்கு இனிய ஒரு காட்சியாகும். போர்க்களத்தில் யானையின் மீது சென்று தைக்கும் அம்புகள் குன்றில் பாய்ந்து சென்று தங்கும் குருவி யினங்கள் போன்று இருக்கின்றன என்று புலவர்கள் வர்ணிக்கின்றனர். இதனை,

"குன்றத் திருந்த குரீஇனம்
போல
அம்பு சென்றிறுத்த அரும்புண்
யானை"

என்றும்,

"கருவியூ டுளங்கழிந்து கணை
மொய்ப்பக் கதஞ் சிறந்து
குருவிசேர் வரை போன்ற
குஞ்சரம்"

என்றுங் வரும் அடிகளால் அறியலாம்.

பந்தும் குருவியும்!

பந்தடிப்பது பழங்காலத்தில் மகளிர் மேற்கொண்டிருந்த ஒரு விளையாட்டு. அடிக்கின்ற பந்து அந்தரத்தில் நீண்டநேரம் நிற்காமலும் திரும்பியபின்னர் கைத்தலத்தில் தங்காமலும் விரைந்து விரைந்து ஆடுவதே பந்தாடுதலுக்குரிய இலக்கணமாகும். பெருங்கதையில், விச்சுவலேகை என்பவள் பந்தடித்தது, பலவகையான திசைகளிலும் பறந்து திரும்பும் சிட்டுக்குருவிகளின் இயக்கம் போல் இருந்ததாம். இதனை,

"குருவிக் கவர்ச்சியின் அதி
ரப் போக்கி"

என்ற அடியால் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

குருவியின் போர்

சிட்டுக் குருவி உருவத்தில் சிறியதாக இருந்தாலும் போரிடுதலில் வல்லதாக இருக்கிறது. உணவு குறித்தும், காதல் குறித்தும் சிட்டுக் குருவிகளிடையே அடிக்கடி போர் நிகழும். ஆனல்

சிறிது நேரத்திற்கெல்லாம் குருவிகள் பகையை மறந்து கூடி வாழத் தொடங்கிவிடும். வேற்று இனத்துக் குருவிகள் வந்தாலோ சிட்டுகள் அணிவகுத்து வரிசை வரிசையாக நின்று போரிடும். போரில் ஒன்றிரண்டு குருவிகள் வீர மரணம் அடைதலும் அடிக்கடி நடைபெறும் நிகழ்ச்சியே. பொதுவாகச் சிட்டு குருவிகள் அழகில் சிறந்தவை. மற்றப் பறவை இனங்களை அருகில் நெருங்க விடுவதில்லை.

சிட்டுக்குருவியின் முட்டைகள்

சிட்டுக் குருவிகள் ஒன்பது முட்டை வரையிலும் இடும். ஆண்டிற்கு நான்கு அல்லது ஐந்து குஞ்சுகளை வளர்த்து ஆளாக்கி விடும். முட்டைகள் ஓரளவு நீல நிறமாக 'பெப்பர்மிட்' போன்று சிறிதாக இருக்கும். குருவிகள் மிகவும் எச்சரிக்கையுடன் கூட்டினைக் காவல் காத்து வரும்.

தேன் சிட்டும், தவிட்டுச் சிட்டும்

சிட்டுக் குருவிகள் இனத்திற்குத் தொடர்பில்லாத இரு இனங்கள் 'சிட்டு' என்ற பெயரால் தவறாக அழைக்கப்படுகின்றன. ஒன்று, மலருக்கு மலர் தாவிய படி 'இம்' என்ற ஒலியுடன் பறந்து திரியும் தேன் சிட்டு; மற்றொன்று உண்மையான சிட்டுக் குருவியினும் சற்று உருவத்தில் பெரிதாக உள்ள தவிட்டுச் சிட்டு Hedge Sparrow தேன் சிட்டின் சிறகுகள் பறக்கும் போது விரைந்து அடித்துச் செயல்படுவதால் 'இம்' என்ற ஒலி எழுகிறது. அதனால் ஆங்கிலத்தில் இதனை ஒலிப் பறவை Humming Bird என்று அழைக்கின்றனர். இதன் அலகு மலர்களைக் குடைந்து தேன் பருகுவதற்கென்றே நீண்டு ஊசி போல் கூர்மையாக இருக்கின்றது. தவிட்டுச் சிட்டுகள் சிட்டுக் குருவியைப் போன்று தறுகண்மையுடன் விளங்குவதில்லை. அவற்றின் அலகுகளிலும் வலிமை இல்லை. சிட்டுக் குருவிகள் போன்று இவை கூடுகளைக் காப்பதில் எச்சரிக்கையாகவும் இருப்பதில்லை. தவிட்டுச் சிட்டுகள் கோழைகளாக இருப்பதால் குயிலினத்துப் பறவைகளால் எளிதில் ஏமாற்றப்பட்டு வருகின்றன. ஆங்கிலக் கவியான வோர்ட்ஸ்வொர்த் Words worth கூடத் தனது 'சிட்டுக் குருவியின் கூடு' The Sparrow's nest என்ற பாடலில் இந்தத் தவிட்டு சிட்டுக் குருவியினையே வர்ணித்து இருக்கிறார். ஏனென்றால் அவர் வியந்து பாராட்டுகின்ற, "அந்தப் பளபளப்பான நீல நிற முட்டைகள்" Those bright Blue egg தவிட்டுச் சிட்டுக்கே உரியனவாகும்.

சிட்டுக்குருவியின் பாடல்

சிட்டுக் குருவிகளில் சிலவகை ஓரளவு பாடும் ஆற்றலையும் பெற்றிருக்கின்றன. சிட்டுக் குருவிகள் "டுவிட்-டுவிட்ட்வீ" என்று மும்முறை உயர்ந்த குரலில் ஒலியெழுப்பும். பின்னர் தொடர்ந்து பல்வேறு ஒலிநிலையிலும் பாடும்.

—"நவ இந்தியா"

குருதேவர் அமைத்த குருகுலம்

ப. ந. தியாகராசன்

அண்மைக் காலத்தில் உலக இலக்கிய அரங்கில் பாரதநாட்டிற்குத் தனியான ஒரு இடத்தைப் பெற்றுத் தந்த மகாகவி குருதேவர் ரவீந்திரநாத தாகூர், தமது காலம், பொருள், சக்தி அனைத்தையும் அர்ப்பணித்து உருவாக்கிய லட்சிய குருகுலம் "சாந்திநிகேதன்". உலகத்தின் பல்வேறு பட்ட கலாசாரங்கள் ஒன்றிச் "சங்கம்" ஆகின்ற சர்வதேசப் பல்கலைக் கழகமாக—குருதேவரின் நினைவுச் சின்னமாக அமைதியான சூழ்நிலையில் 'ஆல்' போல் தழைத்து வளர்ந்து கம்பீரமாகக் காட்சி அளிக்கிறது விசுவபாரதி பல்கலைக் கழகம். சாந்திநிகேதன் இன்று புனிதமான இலக்கிய யாத்திரைத் தலமாகி விட்டது.

கிழக்கு இரயில்வே பகுதியிலுள்ள போல்பூர் இரயில் நிலையத்திலிருந்து ஒரு மைல் தொலைவில் அமைந்திருக்கும் சாந்திநிகேதன், முதன் முதலில் குருதேவரின் தந்தை மகரிஷி தேவேந்திர நாத் தாகூர் அவர்களால் "பிரம்மசரிய ஆசிரமமாக" அமைக்கப்பட்டது. தவ வழியில் சாதனை செய்வதும், மத சம்பந்தமான கிரந்தங்களை தர்க்க ரீதியில் ஆராய்ந்து வாழ்க்கையைத் தெய்விக வாழ்க்கையாக்கிக் கொள்ள முயலுவதும், பிரம்மசரிய ஆசிரமத்தின் முக்கிய நோக்கங்கள். நகரத்தின் ஆடம்பரமான இயந்திர வேகத்தில் செல்லும் வாழ்க்கைக்கு அப்பாற்பட்ட அமைதியான சூழ்நிலையில் அமைந்த சாந்திநிகேதனில், மரத்தடியில் பல மணி நேரம் தன்னை மறந்து தன் சூழ்நிலையை மறந்து, இறைவனுடன் ஒன்றி யோகத் தவத்தில் இருந்து விடுவது மகரிஷி தேவேந்திரரின் வழக்கம். வேத காலத்தில் ரிஷிகள் நடத்திய ஆசிரமங்களைப் போல சாந்திநிகேதனில் "பிரம்மசரிய ஆசிரமத்தை' நடத்த வேண்டுமென்பது மகரிஷியின் லட்சியம்.

மகரிஷி அவர்களால் வித்திடப்பட்டுத் தோன்றிய "பிரம்மசரிய ஆசிரமம்தான் பின்னர் அவருடைய திருக்குமாரன் ரவீந்திரரால் "சாந்தி நிகேதன் ஆசிரமம்" என்று பெயரிடப்பட்டது. இந்த ஆசிரமத்தின் ஆதரவில் 1900ஆம் ஆண்டில் பத்து மாணவர்களைக் கொண்ட ஒரு சிறு ஆரம்பப் பள்ளி துவக்கப்பட்டது. இந்தச் சிறிய பள்ளிதான் இன்று உலகப் புகழ்பெற்று, இந்திய அரசாங்கத்தின் நேரிடையான மே

பார்வையில் நடைபெறும் "விசுவ பாரதி பல்கலைக் கழகமாக விசுவ ரூபம் எடுத்துள்ளது. ரவீந்திர ரின் மதக் கோட்பாடான 'உலக சகோதரத்துவம்' என்பதன் எடுத்துக்காட்டாக விளங்கும் விசுவபாரதி பல்கலைக் கழகம், இன்று உலகிலேயே ஒரு லட்சி யப் பல்கலைக் கழகமாகப் பொலி கிறது என்றால் மிகையல்ல. வட மொழியில் "விசுவம்" என்றால் உலகம் என்றும், "பாரதி" என் றால் ஞானம், பண்பாடு என்றும் பொருள் படும் என்பர் பெரியோர். ஆகவே உலகப் பண்பாடுகள் சந் தித்து உறவாடுமிடம் - உரம் பெறும் இடம்-விசுவபாரதி பல் கலைக் கழகம்.

அந்தக் காலத்தில் இயற்கை அன்னையின் மடியில், திறந்த வெளியில், மரங்களின் நிழலில் இயற்கையோடு உறவாடும் முறை யில் வகுப்புகள் நடைபெற்றன. ஆனால் இன்று மற்றப் பல்கலைக்கழ கங்கள் போன்று ஒவ்வொரு துறைக்கும், பிரம்மாண்டமான கட்டடங்கள் உருவாகிவிட்டன. குருதேவர் இருந்திருந்தால், இதற்கு இசைவு தந்திருக்க மாட் டார் என்று ஒரு சாரார் நம்பு கின்றனர்.

சிறிய அளவில் துவக்கப் பட்ட இம்முயற்சி நாளடைவில் விரிவடைந்தது; சிறிது சிறிதாக இக்கலைக் கோவிலை விரிவுபடுத்தி னார் குரு தேவர். முதலில் "பத பவன்" என்னும் ஆரம்பப் பள்ளி; பின்னர் "சிக்ஷா பவன்" கல் லூரி; இந்திய மாணவர்களும், வெளிநாட்டு மாணவர்களும் ஒன்று கூடித் தத்துவ ஆராய்ச்சி, மொழி ஆராய்ச்சி, இலக்கிய ஆராய்ச்சி, ஆகியவைகளைச் செய்ய "வித்யா பவன்"; சித் திரம், சிற்பம் ஆகிய நுண் கலை களைப் பயில அண்மையில் அமர ரான நந்தலால் போஸ் அவர் களின் மேற்பார்வையில் "கலா பவன்"; இசை நடனம் ஆகியவை களைக் கற்க "சங்கீத பவன்"; சீன மொழி ஆராய்ச்சி, சீன இந்திய கலாசாரத் தொடர்பு குறித்த ஆராய்ச்சி ஆகியவை களை நடத்த "சீனபவன்" ஹிந்தி மொழி ஆராய்ச்சி நடைபெற "ஹிந்தி பவன்" கிறிஸ்துவ மதக் கோட்பாடுகளை ஆராய "தீன பந்து பவன்" இப்படிப்பட்ட பல பல துறைகளைச் சிறிது சிறிதாக நாளடைவில் அமைத்துவிட்ட பெருமை குருதேவருடையது. தவிர. உரியா மொழி இலக்கி யத்தை ஆராய வசதி, ஜைன, இஸ்லாமிய, சீக்கிய, ஸௌராஷ் டிரியன் மதக் கோட்பாடுகளைப் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்த வாய்ப்பு, ஆகியவைகளையும் நல்கி சமரச சன்மார்க்கக் கழகமாக சாந்தி நிகேதனை உருவாக்கி விட் டார் குருதேவர்.

கிராமக் கைத்தொழில் புனர் வாழ்வுக்காக — மறுமலர்ச் சிக்காக சாந்தி நிகேத னுக்கு அருகில் சுருள் என் னும் இடத்தில் ஸ்ரீ நிகேதன் என்ற அமைப்பு ஒன்றையும் உரு வாக்கி, இயந்திர யுகத்தில் பழங் காலக் குடிசைத் தொழில்கள்,

கைத் தொழில்கள் மக்கி மண்ணோடு மண்ணாக அழிந்துவிடாத படி பாதுகாக்க அரண் அமைத்து விட்ட பெருமையும் குரு தேவரைச் சாரும்.

விசுவபாரதி நூல்நிலையம் இந்தியாவில் உள்ள மிகப்பெரிய நூல் நிலையங்களில் ஒன்று. 1947-ஆம் ஆண்டு செட்டி நாடு மன்னர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் ஏராளமான தமிழ் நூல்களை இந்த நூல் நிலையத்திற்கு நன்கொடையாக அளித்தார். அமரர் ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அமரர் பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும் நேரிடையாக சாந்தி நிகேதனுக்கு வந்து 1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஐந்தாம் தேதி நடைபெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் குருதேவனின் குமார் திரு ரவீந்திரநாத தாகூர் அவரிடம் இந்தத் தமிழ்ப் பொக்கிஷங்கள் அத்தனையையும் வழங்கினர் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இதுவரை தமிழ் இலக்கியம், தமிழ்க் கலாசாரம் ஆகியவை பற்றி ஆங்கிலத்தில் வெளி வந்த நூல்கள், தமிழ் இலக்கியத்தின் ஆங்கில மொழி பெயர்ப்புகள், வங்காளி மொழி பெயர்ப்புகள் ஆகியவைகளையெல்லாம் சேகரித்து கடந்த இரண்டு ஆண்டுகளாக, கல்கத்தா தமிழ் எழுத்தாளர் சங்கம் நன்கொடையாக இப்பல்கலைக் கழகத்திற்கு அளித்து தமிழுக்கு நிரந்தரமான இடத்தை இச் சர்வதேசப் பல்கலைக் கழகத்தில் உருவாக்க முயற்சி செய்வதையும் இங்கு நினைவு கொள்ள வேண்டியது அவசியம்.

1961-ஆம் ஆண்டு நடைபெற்ற குருதேவரின் நூற்றாண்டு விழாவை யொட்டி, பல பெரும் கட்டிடங்கள் பல்கலைக் கழகப் பகுதியில் உருப்பெற்றிருக்கின்றன. அவைகளில் குறிப்பிடத் தக்கவை "உத்திராயண்", "விசித்ரா" ஆகியவை, சாந்தி நிகேதனின் வளர்ச்சி, நடவடிக்கைகள், குருதேவரின் வாழ்க்கை வரலாறு பற்றிய புகைப்படங்கள், குருதேவரின் பரம்பரையை விளக்கும் படங்கள், குருதேவர் உபயோகித்த பொருள்கள், ஆடைகள், குருதேவர் நூல்களின் கையெழுத்துப் பிரதிகள், பல்வேறு மொழிகளில் இதுவரை மொழியாக்கம் செய்யப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட குருதேவரின் நூல்களின் பதிப்புகள், குரு தேவரின் கடிதங்கள், ஆகியவை கொண்ட அற்புதமான கண்காட்சி "விசித்திரா"வில் இடம் பெற்றிருக்கிறது.

"குருதேவரின் மறைவுக்குப் பிறகு சாந்தி நிகேதன் ஆன்மாவை இழந்துவிட்டது" என்றும், "சாந்தி நிகேதன் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டுவிட்டது" என்றும் பல அறிஞர்கள் கூறுகின்றனர். இருக்கலாம். ஆனால், சாந்தி நிகேதன் பல்கலைக் கழகத்தில் நுழையும் போதும்,

[43ஆம் பக்கம் பார்க்க]

கல்விச் சிறப்பை ஜான்சன் வலியுறுத்துகிறார்!

அறியாமை அகல உலகளாவிய கல்வி முயற்சி தேவை

ஸ்மித்ஸோனியன் கழகத்தின் இரண்டாவது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடச் சென்ற மாதம் வாஷிங்டன் நகரில் 80 நாடுகளின் தலைசிறந்த அறிஞர்களின் பேரவை நடைபெற்றது. பேரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜான்ஸன் உரை நிகழ்த்துகையில், உலகிலிருந்து அறியாமையை அடியோடு ஒழிப்பதற்கு ஒருமித்த முயற்சி செய்ய வேண்டும் என்றார்.

அமெரிக்காவுக்கு முதன் முதலாகப் பெருங்கொடை வழங்கிய வள்ளல் ஜேம்ஸ் ஸ்மித்ஸன் என்றும், இந்தக் கழகத்தை நிறுவுவதற்கு அவர் தம் செல்வம் முழுவதையும் ஈந்தார் என்றும், மக்களிடையே அறிவை வளர்க்கவும் பரப்பவும் இது பணியாற்றுகிறது என்றும் ஜனாதிபதி கூறினார்.

ஜனாதிபதி உரையின் சில பகுதிகள் வருமாறு:—

நமது நாட்டைத் தோற்றுவித்த தலைவர்கள், கருத்துக்களின் பேராற்றலில் நம்பிக்கை மிக்கவர்கள்.

ஒரு நாடு அறிவை வளர்க்கவும் பரப்பவும் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டதென்றால் உண்மையான புரட்சி தொடங்குகிறது என்பது அவர்களுக்குத் தெரியும். அதை ஒருபோதும் நிறுத்த முடியாது.

என் சொந்த வாழ்க்கையில், நான் ஒரு பள்ளி ஆசிரியனாக வாழ்க்கை தொடங்கக் காரணமாக இருந்த தற்செயலான நிகழ்ச்சிகள் குறித்து நான் பல முறை மகிழ்ந்ததுண்டு. நமது நாட்டில், நமது காலத்தில், அமெரிக்கா பற்றிய நமது கனவுகளுக்குக் கல்வியே அடிப்படை என்று நாம் புதிய முனைப்புடன் உணர்ந்துள்ளோம். நமது நோக்கங்கள் அனைத்துக்கும் நீடித்த உயிர் அளிக்கும் ஆணிவேர் அதுதான். நாம் என்ன செய்ய முற்பட்டாலும் - வறுமையை ஒழிக்கப் போர் நடத்தினாலும் மக்கள் உடல் நலத்துக்கும் நல்வாழ்வுக்கும் புதிய குறிக்கோள்கள் வகுத்தாலும், குற்றங்களை முளையிலேயே கிள்ளினாலும் நமது நகரங்களுக்கும் நாட்டுப் புறங்களுக்கும் அழகூட்டினாலும் எல்லாம் கல்வியைப் பொறுத்தவையே.

ஆனால், ஜேம்ஸ் ஸ்மித்ஸனிடமிருந்து நாம் பெற்ற மரபை இந்நாட்டு எல்லைகளோடு குறுக்கிக் கொள்ள முடியாது. மக்களிடையே அறிவை வளர்த்துப் பரப்பவேண்டுமென்று அவர்

குறிப்பிட்டாரே ஒழிய, அமெரிக்கர்களிடையே மட்டுமென்றே அல்லது மேற்கு உலகின் குடிமக்களிடை மட்டுமென்றே அவர் கூறவில்லை; உலகம் எங்குமுள்ள அனைவரிடையேயும் பரப்ப வேண்டுமென்றார்.

அவரது இருநூறாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகையில், நாம் இன்று காணும் உலகம் முன்பு எப்போதையும்விட இன்று அவர் இட்ட கட்டளையை நிறைவேற்றுவதை அவசரமாக்குகிறது. ஏனெனில், இந்த உலகிலுள்ள எல்லா நாடுகளுக்குமே பொருந்தக்கூடிய சில உண்மைகள் உண்டு என்று இன்று நாம் அறிவோம்; அவை:

—சமாதானத்துக்குரிய நிலையான வாய்ப்புக்களை உருவாக்குபவை கருத்துக்கள்தாம்; படைக்கலங்களல்ல.

—நமது வகுப்பு அறைகளில் பாடத் திட்டங்கள் முன்னேறும் வேகத்தை விட நமது அயல் நாட்டுக் கொள்கையை நடத்தும் வேகம் அதிகமாகி விடாது.

—நமது குடிமக்களின் அறிவு ஒரு செல்வக் களஞ்சியம்; கொடுக்கக் கொடுக்கத்தான் இது பெருகும்.

யார் தமது செலவிலேயே பெற முடியுமோ, அவர்களோடு மட்டிலும் நமது கல்விப் பரிமாற்றத்தை நிறுத்தி விடுவது நமக்குப் பயனேதும் விளைவிக்காது. கல்வி கற்பது இன்னமும் ஒரு சிலரின் தனி ஆடம்பரமாக இருக்கும் நாடுகளுக்கெல்லாம் நாம் கல்விச் செல்வத்தை விரிவுபடுத்த வேண்டும்.

இன்று 70 கோடி முதியோருக்கு மேல்—உலக மக்கள் தொகையில் பத்தில் நாலு பேர்—எழுதப் படிக்கத் தெரியாத இருளில் வாழ்கின்றனர். உலகிலுள்ள நாடுகளில் கிட்டத்தட்டப் பாதியில் வாழும் மக்களில் பாதிப் பேர் அல்லது அதற்கு மேல் அறியாமையில் உழல்கின்றனர். அவர்களுக்கு ஒளியூட்ட உலகம் ஒரு வழி கண்டால் ஒழிய, அறியாமை இருள் நம்மனைவரையும் சூழ்ந்து கொண்டுவிடும்.

நம்மைப் பொறுத்தவரை, இந்த அரசாங்கமும் இந்த நாடும் வழி காண்பதில் சேர்ந்து கொள்ளத் தயார். கடந்த சில ஆண்டுகளில் நம்பிக்கையூட்டும் பல ஆரம்பப் பணிகளை நாம் தொடங்கியுள்ளோம். ஆனால் நாம் இன்றும் எவ்வளவோ செய்ய முடியும்; செய்ய வேண்டும். எனவேதான், உலகளாவிய கல்வி முயற்சிக்கு ஒரு விரிவான நீண்டகாலத்திட்டம் வகுத்து சிபாரிசு செய்யுமாறு எனது அரசாங்கத்திலுள்ள ஒரு சிறப்புப் பணிக் குழுவுக்கு நான் கட்டளையிட்டுள்ளேன்.

எல்லாத் துறைகளிலும் கல்வியின் எல்லாக் கட்டங்களிலும் நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். எல்லா நாடுகளையும் சேர்ந்த பெரிய அறிஞர்கள் வந்துகூடி,

சேர்ந்து உறவாடும் ஒரு நிலையத்தை இங்கு ஸ்மித்ஸோனியன் கழகத்தில் நிறுவ வேண்டுமென்று காரியதரிசி ரிப்ளி கண்ட கனவை நாம் ஆதரிக்க முடியும். இதை விடக் குறைவான கட்டத்தில், அமைதிப் படையின் ஆதரவில் தொடங்கப்பட்டுள்ள பள்ளிக்குப் பள்ளி பரிமாற்றத் திட்டத்தை நாம் வளர்க்க முடியும்; அப்படியானால்தான் நமது குழந்தைகள் ஒருவர் மற்றவரைப்பற்றி அறியவும் அரவணைக்கவும் முடியும்.

மாபெரும் சமுதாயம் பற்றிய இந்நாட்டின் கனவு இதன் எல்லையோடு நின்றுவிடாது என்று காட்ட நாம் விரும்புகிறோம். இது அமெரிக்காவின் கனவுமட்டுமல்ல; இதில் பங்கு கொள்ள அனைவரும் வரலாம். அதற்கு உதவி செய்யுமாறு அனைவரையும் அழைக்கிறோம்.

நாம் ஒன்று சேர்ந்து ஒரு புதிய பெருந்தன்மையான முயற்சியில் ஈடுபட வேண்டும்.

முதலாவது, வளர்ந்துவரும் நாடுகள், வளர்ந்துவரும் பகுதிகள் இவற்றின் கல்வி முயற்சிக்கு உதவுதல்.

இரண்டாவது உலகைப்பற்றியும் உலகில் வாழும் மக்களைப் பற்றியும் தமது அறிவை நமது பள்ளிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் வளர்க்க உதவுதல்

மூன்றாவது, தம் சொந்த நாட்டுக்கு வெளியே சென்று பணிபுரியும் மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் பரிமாற்றத்தை விரிவாக்குதல்.

நாலாவது, புத்தகங்களும் கருத்துக்களும், கலை, விஞ்ஞான, கற்பனைப் படைப்புக்களும் தாராளமாகப் போய் வருவதை அதிகப்படுத்துதல்.

ஐந்தாவது, மக்கள் குலத்தின் பொதுவான பிரச்னைகள் பற்றிச் சிந்திக்க எல்லாக் கொள்கைகளையும், பண்பாடுகளையும் சேர்ந்தவர்களின் கூட்டங்களைக் கூட்டுதல்.

இம்முயற்சிகள் அனைத்திலும் அமெரிக்கா தனது முழுப் பங்கையும் நிறைவேற்றி வைக்குமென நான் உறுதி அளிக்கிறேன்.

ஜனவரி வாக்கில் இவ்வகைத் திட்டம் ஒன்றை நான் சட்டமன்றத்தில் தாக்கல் செய்ய விரும்புகிறேன்.

அன்றாட நிகழ்ச்சிகளின் இரைச்சலுக்கு இடையில் மனிதர்களும், அவர்களது கருத்துக்களுமே வரலாற்றை உருவாக்குகின்றன. நாம்-நாமேதான்-நமது பிரபஞ்சத்தில் வளரும் ஒளி விளக்கை ஏற்ற முடியும் அல்லது இருள் சூழவிட்டு விட முடியும்.

டாக்வில் ஒரு நூற்றாண்டுக்கு முன்பு நமக்கு ஒரு அறைகூவல் விடுத்தார்: "மக்கள் ஒருவர்க்கொருவர் அந்நியர்களாகவோ, அல்லது உலகின் எந்த மூலையிலும் என்ன நடக்கிறதென்பதை அறியாதவர்களாகவோ என்றுமே இருந்துவர முடியாது" என்பதே அது. அறியாமையையும் அநியாயத்தையும் நாம் ஒழிக்க வேண்டும்.

அரசாங்க ஊழியர் சம்பளச் செலவு 5 ஆண்டில் இரட்டிப்பு

புதுடில்லி, செப், 21—முப்படையினர் நீங்கலாக மத்திய அரசாங்கத்தின் ஊழியர்களுக்கு 1961-62ல் தரப்பட்ட ஊதியம் ரூ. 442 கோடி. இது 1965-66ல் ரூ. 805 கோடியாக உயர்ந்துள்ளது. ரயில்வே தபால் இலாகாக்களின் சிப்பந்திச் செலவுகள் இதில் சேரவில்லை.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ராஜ்ய சர்க்கார்கள் வரி உயர்வு உட்பட பல்வேறு வழிகளில் திரட்டிய அதிகப்படி ரொக்க வசதி ரூ. 600 கோடி. இதில் ராஜ்ய சர்க்கார் ஊழியர்களது கிராக்கிப்படி உயர்வுக்காக ரூ. 300 கோடி செலவாயிற்று.

அஸ்ஸாம், பீஹார், மேற்கு வங்கம் ஆகிய மூன்று ராஜ்யங்களிலும் வரி உயர்வு வருமானம் அனைத்துமே ஊழியர்களது ஊதிய உயர்வுக்குப் போய் விட்டது.

நிர்வாகச் சீர்திருத்த கமிஷன் மெம்பர் திரு எச். சி. மாதூர் அளித்துள்ள ஒரு விமரிசனத்தில் இந்தப் புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

கவர்னரும் அவரது பரிவாரங்களும் செய்கின்ற வருஷச் செலவு ஐந்து லட்சம் ரூபாய்க்கு மேல் போகக்கூடாது என்பது திரு. மாதூரின் யோசனை. மூன்றரை லட்ச ரூபாய் செலவழியும் கவர்னர் அமைப்பு இருக்கிறது. பன்னிரண்டு லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகும் கவர்னர் ஸ்தாபனங்களும் இருக்கின்றன.

* * *

[39ஆம் பக்கத் தொடர்ச்சி]

அங்குள்ள மாஞ்சோலையில் அமர்ந்திருக்கும்போதும், குருதேவர் தமது வாழ்வின் கடைசி காலத்தில் வாழ்ந்து வந்த மண் குடிசை ஷியாமளியின் நிழலில் ஒதுங்கும் போதும், ''குருதேவர் மிதித்த மண்ணில் நடமாடுகிறோம். அவர் அமைதியாக அமர்ந்து அற்புதமான கவிதைகளை உருவாக்கிய மாஞ்சோலை நிழலில் அமர்ந்திருக்கிறோம். அவர் வாழ்ந்த மண் குடிசையின் தலைவாசலில் நிற்கிறோம்'' என்ற பெருமித உணர்வுதான் நமக்கு மேலோங்கி இருக்கிறது.

—''தினமணி சுடர்''

—0—

பயன் மிகுந்த புதுப் பயிர்கள்

கொக்கோ :

சாக்லேட் போன்ற கோக்கோப் பண்டங்களை வரவர அதிக அளவில் உள்நாட்டில் உபயோகிப்பதோடன்றி அயல் நாடுகளுக்கும் அனுப்பி வருகிறோம். ஆயினும் அநேகமாக அந்நிய தேசங்களிலிருந்து வரும் கோக்கோ விதைகளைக்கொண்டே அந்தப் பண்டங்களைத் தயாரிக்கிறோம். எனவே, ஏற்றுமதி பெருக அதிக அந்நியச் செலாவணியைச் சம்பாதிக்க வேண்டுமானால் நம் நாட்டில் கோக்கோச் சாகுபடியை அதிகரிப்பது அவசியமாகும்.

கோக்கோவில் இருவகை உண்டு. பாரெஸ்டெரோ என்னும் வகையையே நம் கோக்கோத் தொழிலாளர்கள் அதிக அளவில் அயல் நாடுகளிலிருந்து தருவித்துப் பயன்படுத்துகின்றனர். ஆனால் அதைவிட கிரியோலோ என்னும் வகையே உயர்ந்தது; உலக மார்க்கெட்டில் 30 சதவிகிதம் வரை அதிக விலை பெறுவது. ஆகவே, முதலில் அதை மட்டுமே புகுத்த இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் முடிவு செய்தது. அதன் பயனாக சென்னை, கேரளம், மைசூர், மகாராஷ்டிரம் ஆகிய ராஜ்யங்களில் அதன் சாகுபடி துவக்கப்பட்டது.

சென்னை சம்பந்தப்பட்டவரையில் மதுரை ஜில்லாவிலுள்ள தந்திரிக்குடி, கன்யாகுமரி ஜில்லாவைச் சேர்ந்த பேச்சிப் பறை, திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கும் காரையார் ஆகிய மூன்று இடங்களிலும் தலா பத்து ஏக்கராப் பரப்பில் முன்னோடித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. காரையாரில் க்ளைரிஸிடியா புதர் நிழலில் பயிர் செய்து பார்க்கப்பட்டது. அம்முறை நல்ல பலன் தரவே, சுற்றுப்புறத்திலும் சாகுபடி செய்யத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் 250 ஏக்கராவில் கோக்கோவைப் பயிரிட உத்தேசம். இதற்காக ஏக்கராவுக்கு ரூ. 250 வீதம் (அதிக பட்சமாக ரூ. 2500 வரை) கடன் கொடுக்க தமிழக அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

க்ளைரிஸிடியா மட்டும்தான் என்பதில்லை; பனைமர நிழலிலும் கோக்கோப் பயிர் செழித்து வளரும் என்பதை பிலிப்பைன்ஸிலுள்ள குளிஸான் ஆராய்ச்சிப் பண்ணையில் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் கோக்கோப் பயிர் தழைப்பதோடு அதற்கு நிறைய உரங்கள் போட்டு, பாது

காப்பு நடவடிக்கைகளும் எடுக்கப் படுவதால் பனேயும் அதிகப்பலன் அளிக்கும் என்பது தெரியவந்தி ருக்கிறது. எனவே, காசரகோடி லுள்ள ஆராய்ச்சி நிலேயத்தினர் தென்னேத்தோட்ட நிழலில் கோக்கோவைச் சாகுபடி செய்து பார்க்கின்றனர். இந்தப் பரிசோதனே இதுவரை வெற்றிமுகமாகவே இருக்கிறதாம்.

சிக்கிரி :

காப்பிக்கொட்டை கண்டு முதல் குறைந்துவிட்டதோடு அவசியமான அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதற்காக அயல்நாடுகளுக்கு அதிக அளவில் அனுப்பவும் வேண்டியிருப்பதால் இப்போதெல்லாம் அதனுடன் சிக்கரியைக் கலந்து பயன் படுத்தும் பழக்கம் வரவரப் பெருகிப் பரவி வருகிறது. முன்பெல்லாம் இந்த சிக்கரிப் பொடி அயல் நாடுகளிலிருந்தே வந்து கொண்டிருந்தது; இதனுல் வருடந்தோறும் ரூ. 40 லட்சம்வரை அந்நியச் செலாவணி விரயமாகி வந்தது. இப்போதோ சுமார் ஒரே லட்ச ரூபாய் செலவில் வெளிநாடுகளிலிருந்து விதைகள் தருவிக்கப்பட்டு இங்கேயே சாகுபடி செய்யப்படத் தொடங்கி விட்டது.

இந்தச் சாகுபடி முக்கியமாகச் சென்னேயிலும் சௌராஷ்டிரத்திலும் தான் நடக்கிறது. சமசீதோஷ்ணம் நிலவும் கோயமுத்தூர் ஜில்லாவில்தான் இந்தச் சாகுபடி சாத்தியமென முதலில் நினேக்கப்பட்டு வந்தது. ஆனுல் பின்னர் வெப்பமும் வறட்சியும் மிகுந்த திருநெல்வேலி, செங்கல்பட்டு, ராமநாதபுரம் ஜில்லாக்களுக்கும் வியாபித்தது அது இப்போது கன்யாகுமரி ஜில்லாவுக்கும் பரவிவிட்டது.

முள்ளங்கி போன்ற கிழங்கிலிருந்தே சிக்கரித்தூள் தயாராகிறது; ஆகவே, எந்தக் கிழங்கையும் போலவே அதுவும் சாகுபடி செய்யப்படுகிறது. ஆதார உரமாக 15 டன் தொழு எருவும், 45 கிலோ கிராம் சூபர்பாஸ் பேட்டும் போடப்பட்ட வயல்களில் வரிக்குழியிட்டபின் சம அளவு மணலுடன் விதையைக் கலந்து தூவ வேண்டும். பூவாளி கொண்டு தண்ணீர் தெளிப்பதோடு குழிகளிலும் நீர் பாய்ச்ச வேண்டும். ஆரம்ப காலத்தில் இரு தினங்களுக்கொரு முறை வீதம் இப்படிப் பாசனம் செய்வது அவசியம். அப்புறம் வாரம் ஒருமுறை போதும். 20 முதல் 25 ஸெண்டிமீட்டர் வரை இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொண்டு இதர நாற்றுகளே அகற்றிவிடவேண்டும். ஐந்தே மாதத்தில் அறுவடை செய்யலாம்.

ஓர் ஏக்கராவில் கிடைக்கும் கிழங்கைச் சிறு துண்டுகளாக வெட்டி உலர்த்தினுல் $1\frac{1}{2}$ முதல் 2 டன் வரையில் தேறும். இந்தத் துண்டுகளே வறுத்து இடித்துத் தான் சிக்கரித் தூள் தயாரிக்கப் படுகிறது. 'உரவழி'

சமூகத்தின் புத்திசாலிகள் மீண்டும் அரசியலில் ஈடுபடுவது நல்லது

திட்டக்குழு உறுப்பினர் திரு. பார்வே கூறுகிறார்

சென்னை, ஆக. 29—"பொது மக்களில் புத்திசாலிகளாக உள்ளவர்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ளனர். அவர்கள் தற்போது அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளில் சிரத்தை காட்டுவதில்லை. ஆனால் நாட்டின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு அவர்கள் எவ்வளவோ செய்ய முடியும்" என்று திட்டக் கமிஷன் உறுப்பினரான திரு பார்வே இன்று இங்குக் கூறினார்.

கோகலே-சாஸ்திரி பொருளாதார, அரசியல் இன்ஸ்டிட்டியூட் கட்டிடத்திற்கு அடிக்கல் நட்டுப் பேசிய போதே திரு பார்வே இவ்வாறு குறிப்பிட்டார். இந்த விழா, மயிலாப்பூர் கற்பகாம்பாள் நகரில் நடைபெற்றது. கோகலே பிறந்ததின நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு இந்த விழா நடைபெற்றது. தென் இந்திய சங்கம், ரானடே நூலகத்தின் தலைவரான டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் தலைமை வகித்தார்.

திரு பார்வே மேலும் கூறினார் : நாட்டின் அரசியல், பொருளாதார விதிகளை அரசியல்வாதிகளிடமோ அல்லது தொழில் நுணுக்க நிபுணர்களிடமோ ஆராய்ச்சியாளர்களிடமோ விடுவது நல்லதல்ல. நாட்டை எதிர்நோக்கியுள்ள அடிப்படைப் பிரச்சினைகளை மக்கள் புரிந்துகொண்டால்தான், நாட்டின் அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவர்கள் உதவி புரிய முடியும். சமுதாயத்தில் புத்திசாலிகளாக உள்ளவர்கள் அரசியலில் சம்பந்தப்படாமல் விலகி நிற்பது துரதிர்ஷ்டமாகும். இப்போதுள்ள நிலையில் அவர்கள் நாட்டிற்கு எவ்வளவோ சேவை செய்ய முடியும். முன்பு செய்து வந்ததைப் பார்க்கிலும் அவர்களால் அதிகமான சேவை செய்ய முடியும். இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ள ஸ்தாபனம் சமூகத்தில் உள்ள புத்திசாலிகளை நாட்டின் பொருளாதார சுதந்திரப் போராட்டத்திற்குள் இழுக்க வேண்டும். அவர்களுடைய உதவியும் ஒத்துழைப்பும் நாட்டிற்கு ஏற்படப்போகும் தொழில் நுட்ப பொருளாதார புரட்சிகளுக்கு மிகவும் தேவை.

டாக்டர் சி. பி. உரை

டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் பேசுகையில் ரானடே, கோகலே மகாகனம் சீனிவாச சாஸ்திரி ஆகியோருடன் தனக்கு ஏற்பட்டிருந்த தொடர்பைப் பற்றிக் குறிப்பிட்டார்.

செய்திச் சுருள்

சூரிய வெளிச்சம் மூலம் மின்சாரம்

புதுடில்லி, ஆக. 28—சூரியனின் வெளிச்சம் சக்தியை நேரடியாக மின்சார சக்தியாக மாற்றும். சூரியன் "செல்கள்" அமைக்கும் நடைமுறையை டில்லியில் உள்ள பாதுகாப்பு இலாகா ஆய்வுக்கூடம் கண்டுபிடித்துள்ளது.

சிறு அளவில் தயாரிக்கப்படும் இந்தச் செல்கள், இறக்குமதி செய்யப்படுபவை போல நன்றாக இருக்கின்றன.

ஒரு சதுர மீட்டரில் உள்ள இந்தச் செல்கள் சூரியவெளிச்சத்தில் 100 வாட் மின்சார சக்தி கொடுக்க முடியும்.

பாதுகாப்பு சாதனத்தில் அவற்றின் உபயோகம் முக்கியமானது. ரிடான்சிஸ்டர்களிலும் அவற்றை உபயோகிக்க முடியும்.

* * *

பம்பாயில் 25 மொழிகள் தமிழ் பேசுவோர் ஒரு லட்சம்

பம்பாய், ஆக, 27— 41, 52 லட்சம் ஜனத்தொகையும், 159 சதுர மைல் பரப்பளவும் உள்ள பம்பாயில் 25 இந்திய, அந்நிய மொழிகள் பேசப்படுகின்றன.

மராத்தியும், குஜராத்தியும் பிரதானமாக பேசப்படுகின்றன. மராத்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 17·75 லட்சம் பேர்; குஜராத்தி 793 லட்சம் பேர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் 1,04,000 பேர்.

இரவைப் பகலாக மாற்ற ஒரு கண்ணாடிக் கோள்

வாஷிங்டன், ஆக, 12—பூமியின் சில பகுதிகளில் இரவைப் பகலாக மாற்றக்கூடிய நிலைக் கண்ணாடிக் கோள்களைத் தயாரிப்பதற்கு மூன்று காண்ட்ராக்டுகளை யு. எஸ். அரசாங்கம் வழங்கியுள்ளது.

வான வெளியில் இக்கோள்கள் மீது சூரிய வெளிச்சம் விழும்; அந்த ஒளியை இந்தக் கண்ணாடிக் கோள்கள் ஈர்த்து கிரணங்கள் மூலம் எதிரொளியாக்கிவிடும். அந்த எதிரொளியைக் கொண்டு குறிப்பிட்ட பகுதிகளில் இரவில் சூரிய வெளிச்சம் இருக்கும்படி செய்யலாம்.

வியட்நாமில் போராட்டப் பகுதிகளில் இரவைப் பகலாக்கிப் போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இந்தச் சாதனத்தைப் பயன்படுத்துவதில் யு.எஸ். ராணுவத் தலைமையினர் அக்கறை காட்டி வருகிறார்கள்.

* * *

செயற்கை வெண்ணெய் ரப்பர் விதையிலிருந்து தயாரிப்பு

கொழும்பு, ஆக, 30—ரப்பர் மரத்தின் முற்றிய நெற்றுகளிலிருந்து விதைகள் விழுந்து நசிகின்றன; இலங்கையின் மேற்கிலும், தெற்கிலுமுள்ள மலைத் தோட்டங்களில் அவை இவ்வாறு பெருவாரியாக விழுகின்றன.

அவற்றை வைத்துத் தாவரவெண்ணெய் எடுக்க முடியும் என்பது இப்போது தெரிய வந்துள்ளது. இவற்றைக் குழம்பாக்கி வாசனை சோப்பு தயாரிக்கும் கூட்டுச் சரக்காகவும் செய்து கொள்ளலாம்.

இவ்விதைகளிலிருந்து எண்ணெய் அல்லது எண்ணெய் சத்துள்ளவற்றைத் தயாரிப்பதற்காக இவற்றை ஏற்றுமதி செய்ய முடியுமாவென்பதை இலங்கையில் சோப்புச் செய்யும் தொழிலுக்கு நெடுங்காலத்திற்கு முன்னமே இலங்கையின் விஞ்ஞானத் தொழிலியல் ஆராய்ச்சிக்கூடத் தலைவரான டாக்டர் எஸ். சுந்தரலிங்கம் இருபது ஆண்டுகளாக ஆராய்ந்து வந்தார்.

இன்று இலங்கையின் ரப்பர் ஆராய்ச்சிக் கூடத்தைச் சேர்ந்த டாக்டர் நடராஜா ஒரு புதிய வழியைத் திறந்துவிட்டிருக்கிறார்.

ரப்பர் விதையின் கொட்டை நீக்கி அதிலிருந்து எண்ணெய் இறக்கி, அதைச் சோப்பு செய்யும் கூட்டுப் பொருளாக்க முடியுமா என்பது குறித்து ரப்பர் ஆராய்ச்சிக் கூடம் வர்த்தக நிறுவனமொன்றுடன் சேர்ந்து ஆராய்ந்து வருகிறது.

அந்த எண்ணெயை உண்ணத் தக்கதாக்கும் வகையில் சோதனைகள் நடத்துகின்றன; அதைத் தேங்காயெண்ணெய் அல்லது நெய்யைப்போன்று சமையலுக்குப் பயன்படுத்தும் வகையில் அம்முயற்சி நடக்கிறது.

உதிர்ந்து விழுந்து மக்குவதற்கு முன்னர் பொறுக்கப்பட்ட ஒரு ராத்தல் ரப்பர் விதை, தோட்டக் காடுகளில் 5 சதத்திற்குக் கிடைக்கிறது. மேற்சொன்ன வர்த்தக நிறுவனம் அவ்விதைகளை வாங்கி, ஆய்வுச் சாலைகளுக்கும் அனுப்ப சித்தமாயிருக்கிறது.

மேற் சொன்ன சோதனைகள் வெற்றி பெற்றால், அது ரப்பர் தொழிலில் புதிய கட்டமாய் அமையும். அத்தொழில் இது வரையிலும் பால் எடுத்துப் பக்குவப்படுத்தும் பணியை மட்டுமே செய்து வந்த நிலைமை மாறும்.

* * *

ஒன்றையும் கேளாதே; எதையும் பதிலாக்க விரும்பாதே. கொடுக்க வேண்டியிருப்பதைக் கொடு; அது உன்னையே திரும்ப அடையும்—ஆனால் அதைப்பற்றி இப்போது நினையாதே. அது ஆயிரம் மடங்காகப் பெருகி உன்னிடம் மீளும்—ஆனால் அதில் கவனத்தைச் செலுத்துதல் கூடாது. கொடுக்கும் சக்தி உன்னிடம் உளது; ஆதலின் கொடு; அதோடு நிற்க. —சுவாமி விவேகானந்தர்

நாகரிகமும் பண்பாடும்

[நாவலர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.]

"ஹுத்தரன் சென்டர்சாரின் சத்தியசாட்சி" ஒலிபரப்பில் நாவலர் இரா நெடுஞ்செழியன் அவர்கள் செப். 5ஆம் நாளன்று வானொலியில் உரையாற்றினார்.

அவரது உரை வருமாறு :

உலகிலே பல்வேறு, வகையான நாடுகளைப் பார்க்கிறோம். பல்வேறு வகையான நாடுகளிலே பல்வேறு வகையான மக்களைப் பார்க்கிறோம். ஒவ்வொரு நாட்டினரையும் ஒவ்வொரு விதமாகப் பிரித்துக் காணுகிறோம். ஒரு சில நாட்டினரை உயர்ந்தவர்கள் என்றும், சிறந்தவர்கள் என்றும் பெருமை மிக்கவர்கள் என்றும் புகழ்மிக்கவர்கள் என்றும் கூறுகிறோம். ஒருசில நாட்டினரைத் தாழ்ந்தவர்களென்றும், மிக இழிந்த நிலைமையிலிருப்பவர்ளென்றும் நாகரிகம் பெறாதவர்களென்றும் நாம் குறிப்பிடுகிறோம்.

உலகிலுள்ள மக்களை அளந்து பார்ப்பதற்குஇரண்டுசொற்களைப் பொதுவாக உலகச் சான்றோர்கள் பயன் படுத்தி வருகிறார்கள். ஒரு சொல்லை நாகரிகமென்கிறோம். மற்றொரு சொல்லைப்பண்பாடு என்கிறோம். ஆங்கிலத்திலே Civilization என்கிற சொல்லுக்கு ஏற்ற தமிழ்ச் சொல்லாக நாகரிகம் என்ற சொல்லையும் Culture என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ற சொல்லாகப் பண்பாடு என்ற சொல்லையும் நாம் பயன்படுத்தி வருகின்றோம். இந்த இரண்டு சொற்களை வைத்துக் கொண்டுதான் உலகத்திலிருக்கிற பல்வேறு மக்களை அளந்து பார்க்கிறோம். கிரேக்க நாட்டு மக்களையும் ரோம் நாட்டு மக்களையும் பண்டைத் தமிழக மக்களையும் சிறந்த நாகரிகமுடையவர்களென்றும், பண்பாடு கொண்டவர்களென்றும் அந்தச் சொற்களை வைத்துக் கொண்டு தான் அளந்து பார்க்கிறோம். காட்டு மிராண்டிகளையும் எஸ்கிமோயர்களையும், நீக்ரோ மக்களையும் மிகத் தாழ்ந்தவர்கள், நாகரிகம் பெறாதவர்கள், பண்பாடு மிகாதவர்கள் என்று கூறுகிறோம்.

இரண்டு சொற்களை வைத்துக் கொண்டுதான் ஒரு நாட்டினுடைய மக்களை நாம் அளந்து பார்க்க வேண்டியவர்களாயிருக்கிறோம்.

நாகரிகம் என்ற சொல் எதைக் குறிக்கிறது என்பதையும், பண்பாடு என்ற சொல் எதைக் குறிக்கிறதென்பதையும் நாம் ஆராய்ந்து பார்ப்போமேயானால், நாகரிகம் என்ற சொல் மனிதனுடைய புறத்தோற்றப் பொலிவை, அழகை, அருமையை

எடுத்துக்காட்டுகின்ற ஒன்று; பண்பாடு என்பது மனிதனுடைய அகத்தோற்றப்பொலிவை, அழகை, அருமையை நமக்கு உணர்த்துகின்ற ஒன்று, புறத்தோற்றப் பொலிவு பற்றிய ஆற்றலையெல்லாம் நாகரிகத்தின் பாற்படும், அகத் தோற்றத்தினுடைய அழகு பற்றிய தெல்லாம் பண்பாடு என்றும் தெளிவாக நாம் கூறுகின்றோம்.

அழகான வீடுகள், அழகான மாடமாளிகைகள், கூட கோபுரங்கள், விதவிதமான கண்ணைக் கவருகின்ற உடைகள், விதவிதமான பதுமைகள், ஓவியங்கள், சாலைகள், சோலைகள் விதவிதமான அடுக்கு மாளிகைகள், விதவிதமாக உடை உடுத்துகின்ற முறைகள், தலைமயிரை வாரிவிட்டுக் கோதுகிற முறை, பூச்சூடுகின்ற முறை, நடையுடை பாவனைகளில் மேற்கொள்ளுகின்ற முறைகள் எங்கு பார்த்தாலும், அழகாகக்காண வேண்டுமென்கிற நிலைமை, கண்ணைக் கவரும்படியான நிலைமைகள் ஏற்படுத்திக்கொள்கிற முறை இவை ஆகிய அத்தனையையும் நாகரிகமென்று சொல்லிக் கொள்கிறோம்.

ஈவுடையவன், இரக்கமுள்ளவன், பிறர் நலம் பேணுபவன், அன்புடையவன், அருளுடையவன், தன்னலம் கருதாதவன், பிறர்நலத்திற்காகத் தன்னலத்தைக் கொடுக்க முன் வருபவன், தன் ஒருவன் வாழ்வு கெடுவதன் காரணமாகப் பலருடைய வாழ்வு மிளிருமேயானால் அதற்காகத் தன்னுடைய வாழ்வைக்கெடுத்துக்கொள்கின்ற அளவுக்கு முன்னின்று உழைப்பவன், பிறருக்காக வாழவேண்டுமென்ற, அளவுக்குக் குறிக்கோள் கொண்டவன் என்ற அளவுக்கு, உள்ளம் பண்பட்டுப் பண்பட்டு வருகின்ற ஒன்றை நாம் பண்பாடு என்கின்றோம். பண்பட்டுப் பெறுகின்ற ஒன்றைத்தான் நாம் பண்பாடு என்று அழைக்கின்றோம்.

அந்தப் பண்பாட்டை ஆயிரமாயிரம் ஆண்டுகளாகப் பல ஆன்றோர்களும் சான்றோர்களும் முயன்று முயன்று, மெல்ல மெல்லக் காட்டுமிராண்டி காலத்திலிருந்து நாகரிக நிலைக்கு மனிதன் நகர்ந்து வருகின்ற காலத்தில் இழுத்துக் கொண்டு வந்திருக்கின்றவர்களை நாம் பார்க்கின்றோம். எனவே, நாகரிகமென்பதற்கு உறுதுணையாக இருப்பது அறிவியல் என்றால், பண்பாட்டிற்கு உறுதுணையாக இருப்பது கலையியல் என்னலாம்.

நாம் கொள்கின்ற கருத்துகளை இருவகையாக நாம் பிரிக்கலாம். ஒருவகையான கருத்துக்களை அறிவியல்என்கிறோம். மற்றொரு வகையான கருத்துக்களை நாம் கலையியல் என்கிறோம். ஆங்கிலத்தில் சொல்ல வேண்டுமென்றால் Seience and Arts என்று நாம் பிரிக்கிறோம். எது அறிவியல் எது கலையியல் என்று நாம் பிரித்துப் பார்ப்போமேயானால் அறிவால் அளந்து

பார்க்கப் படுகின்ற ஒன்றை அறிவியல் என்றும் உணர்வால் அளந்து பார்க்கப்படுகின்ற ஒன்றைக் கலையியல் என்கிறோம்.

அறிவால் அறிதல் என்ற சொல்லிலிருந்து பிறந்தது தான் அறிவு என்ற சொல்.

உலகத்திலே அண்டத்திலிருக்கிற உண்மையை இருக்கிறவாறு எடுத்துச்சொல்லுகின்ற ஒன்றை அறிவியல் என்கிறோம். உள்ளத்தால் உணர்ந்து பார்க்கின்ற ஒன்றைக் கலையியல் என்கிறோம்.

இந்த அண்டம் எப்படி இருக்கின்றதென்று அறிவியல் அறிஞனைக் கேட்போமானால் "இந்த உலகமானது 2400 மைல் சுற்றளவு கொண்டது. 8000 மைல் குறுக்களவு கொண்டது. கதிரவன் 9 கோடி இருபது லட்சம் மைல் தொலைவிலே இருக்கிறது. கதிரவன் இந்த உலகத்தைவிட 13 லட்சம் மடங்கு பெரிது. உலகமானது முன்னூற்று அறுபத்து ஐந்தே முக்கால் நாளிலே ஒரு தடவை சுற்றிச் சுழன்று வருகிறது. தன்னைத் தானே 24 மணி நேரத்தில் ஒரு தடவை சுற்றிச் சுழன்று கொள்கிறது." என்று சொல்லுவான்.

ஆனால் கலைஞனைக் கேட்டால், "கதிரவன் தன்னுடைய செவ்விய கதிர்களைப் பரப்பி கீழ்க்கடலிலே தோன்றி மேலே இருக்கின்ற இருளை எல்லாம் அகற்றி பனிப் படலத்தை நீக்கி இருளை நீக்கி, வான வெளியிலே வந்து ஊர்ந்து சென்று மேலைக் கடலிலே மூழ்கி மீண்டும் குளிராக மாறி நிலா என்று பேரெடுத்து, வானவீதியிலே வந்து மேகக் கூட்டங்களிடையே நுழைந்து,கீழே இருப்பவர்கள் என்ன செய்கிறார்கள் என்று எட்டி எட்டிப் பார்த்து, கீழே இருக்கிறவர்களைப் பார்க்க வெட்கப்பட்டு மறுபடியும் மேகக் கூட்டத்திலே நுழைந்து செல்லுகிறான்" என்று கலைஞன் பாடுவான். அது உண்மையா என்றால் உண்மையன்று;உணர்ந்த ஒன்று.

அறிவியல் அறிஞன் அறிந்த ஒன்றைச் சொல்லுகிறான்: கலைஞன் உணர்ந்த ஒன்றைச் சொல்லுகின்றான்.

அறிவியல் மனிதனுடைய புறத்தோற்ற நாகரிகத்திற்கு உறுதுணையாக இருப்பது.

இப்போது மாடமாளிகை கூட கோபுரங்களை நாகரிகத்தின் காரணமாகப் பெற்றிருக்கிறோம். என்றால், அவை அத்தனையும் அறிவியலுடைய விளைவாகும். 122 அடுக்கு மாளிகையை நாம் கட்டுகிறோம். விதவிதமான வாகனங்களை நாம் பெறுகின்றோம். ஆயிரம் மைலுக்குமேல் செல்லக்கூடிய விமானத்தை நாம் ஓட்டுகின்றோம். சந்திர மண்டலத்தை எட்டிப்பிடிக்கின்றோம். அங்கு போய் இறங்குவதற்கான அளவுக்கு முயற்சிகளை எல்லாம் செய்கின்றோம். விதவிதமான பொருள்களை உருவாக்குகின்றோம். எனவே மனிதன் செய்யக்கூடிய அனைத்தையும் பொறியினால் செய்யக்கூடிய முயற்சியில் நாம் ஈடுபடுகிறோம் என்றால்

இவை அத்தனையும் நாகரிகத்தினுடைய — அறிவியலுடைய விளைவாகும்.

நாகரிகத்திற்கு உறுதுணை புரிவது அறிவியல் என்றால் மனிதனுடைய பண்பாட்டிற்கு உறுதுணை புரிவது கலையியலாகும். எனவே இலக்கியக் கலையும், இசைக்கலையும், நாடகக்கலையும் வேறுபல கலைகளும்தான் காட்டுமிராண்டி மனிதனை மெல்ல மெல்லப் பண்பாட்டு நிலைக்கு இழுத்துக் கொண்டு வருகின்ற நிலையிலிருக்கின்றன. ஆக உள்ளத்தைச் செம்மைப்படுத்துகின்ற சீரிய கருவி கலை தான். அந்தக்கலையின் மூலம்தான் மனிதனுடைய உள்ளத்தைச் செம்மைப்படுத்த முடியும். மற்ற எல்லாக் கலைகளையும் விட மிகச் சிறந்த கலையாக விளங்குவது இலக்கியக் கலை, ஓவியத்தைக்கலை என்கிறோம். சிற்பத்தைக் கலை என்கிறோம். நடனத்தைக் கலை என்கிறோம். இலக்கியத்தைக்கலை என்கிறோம். மற்றைய அறிவியல் சம்பந்தப்பட்ட, அத்தனை பொருள்களையும் நாம் உலகத்திற்குப் பொதுவாகக் கருதுகிறோம். நான்கை நான்கால்பெருக்கினால்பதினாறு வரும் என்று அறிவியலில் நாம் சொல்கிறோமென்றால், அது ரஷ்யாவிலும்பதினாறு தான்; பாகிஸ்தானிலும் பதினாறுதான். இந்தியாவிலும் பதினாறுதான். எந்த நாட்டிலேயும் அதேதான்.

அறிவியல் எல்லா நாட்டுக்கும் ஒன்றாகத்தான் இருக்கும். ஆனால் கலையியல் நாட்டுக்கு நாடு, கண்டத்துக்குக் கண்டம், இடத்துக்கு இடம், ஆளுக்கு ஆள், ஆளின் வீட்டுக்கு வீடு. வீட்டிலிருக்கிற ஒருவருக்கு ஒருவர். அந்த ஒரு ஆளிலேயே அவன் 16 வயதாயிருக்கும் போது எண்ணும் எண்ணத்திற்கும், அவனே 80 வயதாக மாறுகின்றபோது எண்ணுகிற எண்ணத்திற்கும், அவன் சாப்பிட்டு முடிந்தபின் எண்ணுகிற எண்ணத்திற்கும், ஒருவன் பொருள் கொடுப்பான் என்று தெரியும் பொழுது பாடுகிறபாட்டிற்கும், பொருள் கொடுக்கமாட்டான் என்று எண்ணினால் அப்பொழுது அவன் பாடுகிற பாட்டிற்குமே உணர்வு வேறுபடும். எனவே கலையியல், ஆளுக்கு ஆள் மாறும்.

ஒரே ஓவியத்தை எல்லா ஓவியப் புலவர்களும் வரைந்து காட்டமாட்டார்கள். அவர்களுடைய உள்ள உணர்வைப் பொறுத்துத்தான் ஓவியங்கள் வரையப்படும். ஒரு இயற்கைக் காட்சியை வரைந்து தரச் சொல்லி 15 ஓவியப் புலவர்களிடத்திலே சொன்னால் ஒவ்வொரு ஓவியப் புலவரும் தங்கள் உள்ள உணர்ச்சியைச் சேர்த்துதான் அத்தகைய ஓவியத்தை வரைந்து காட்டுவார்கள்.

ஆனால் விஞ்ஞானிகள் இருபது பேரை வைத்து விஞ்ஞான முடிவைக் கண்டுபிடிக்கச் சொன்னால் இருபது விஞ்ஞானி

களுக்கும் ஒரே முடிவுதான் வரும்.

உலகத்தினுடைய குறுக்களவு 7000 மைல் என்று இந்திய விஞ்ஞானிகள் அளந்தாலும் சரிதான் அது அமெரிக்க விஞ்ஞானிகள் அளந்து பார்த்தாலும் சரிதான், அது சீன விஞ்ஞானி அளந்து பார்த்தாலும் சரிதான், அல்லது பாகிஸ்தான் விஞ்ஞானி அளந்து பார்த்தாலும் சரிதான். உலகத்தினுடைய குறுக்களவு 7000 மைலாகத்தான் இருக்கும்.

ஆனால் கலையியல் நாட்டுக்கு நாடு மாறக்கூடிய ஒன்று. எனவே உள்ளத்தைச் செம்மைப் படுத்துகின்ற ஒன்று கலையியலாகத்தான் இருக்க முடியும்.

ஓவியக்கலை, நாடகக்கலை, மற்ற எல்லாக் கலைகளையும்விட இலக்கியக்கலைகளை மிகச் சிறந்தனவாக உலகத்தார் போற்றுகிறார்கள். காரணம் மற்றைய கலைகள் தராத தன்மையைத் தருகின்ற வாய்ப்பு இலக்கியக் கலைக்கு மட்டும்தான் உண்டு.

ஓவியக் கலையை எடுத்துக் கொண்டால், ஓவியனுக்கு இரண்டு அளவுகள்தான் வரும் குறுக்களவு நீட்டளவு ஆகிய இரண்டு அளவை வைத்துக் கொண்டுதான் அவன் வரைய வேண்டி வரும். ஒரு நீலமலை வெள்ளிய அருவி, அது இழைந்தோடுகின்ற பாங்கு, அது பசும்புல் தரையிலே பரந்து ஓடுகின்ற நிலைமை, நீலக்கடலில் போய்க் கலக்கின்ற காட்சி, அங்கே வெள்ளி அலைகள் துள்ளி விழுகின்ற காட்சி நிலைமைகள், அந்த அருவியிலே மிதந்துவருகின்ற ரோஜா மலர். அதனுடைய கரையிலே இருக்கின்ற காதலன் காதலி ஆகிய ஓவியத்தைத்தான் ஓவியப் புலவர் கொண்டு வந்து நிறுத்துவார்.

சிற்பிக்கு ஓரளவு கூட சேருகிறது. பருமன்கூட சேருகிறது. மூன்று அளவுகளுக்குள்ளே நின்று சிற்பி தனது காட்சியைக் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்.

ஒரு உருவத்தினுடைய உள்ளத்தில் அழுகை இருந்தால், அழுகையை மட்டும் தான் சிற்பி முகத்திலே காட்ட முடியும். ஒரு உருவத்தினுடை உள்ளத்திலே வியப்பு இருந்தால் வியப்புணர்ச்சியை மட்டும்தான் முகத்தில் காட்டமுடியும். உள்ளத்தில் வாட்டம் இருந்தால் அதை மட்டும்தான் காட்ட முடியும். துக்கமிருந்தால் துக்கத்தை மட்டும் தான் காட்ட முடியும்.

ஆனால் உள்ளத்திலிருக்கிற கருத்துக்கள் அத்தனையும் கொண்டு வந்து சிற்பியினாலோ ஓவியப் புலவனாலோ முகத்திலே தேக்கிக் காட்டவே முடியாது. ஆனால் அவர்கள் அத்தனை பேரையும் மிஞ்சுகிறான் இலக்கியப் புலவன்.

இலக்கியப் புலவன் நீலமலையையும் கொண்டு வந்து நிறுத்துவான்; அது எப்போது ஏற்பட்டது என்று சொல்லுவான். அதனுடைய அறிவு எங்கே ஆரம்பித்து எங்கே வருகிறது என்

றும் சொல்லுவான். ஓவியப் புலவனால் அறிவை மட்டும்தான் காட்ட முடியுமே தவிர அதி லிருக்கிற குளிர்ச்சியை அவனால் காட்ட முடியாது. இலக்கியப் புலவன் அறிவையும் காட்டுவான். அதன் அகல நீள ஆழத்தையும் காட்டுவான். அதனில் மிதந்து வருகின்ற ரோஜா மலரை மட்டும்தான் ஓவியப் புலவன் காட்டுவான். அதனுடைய மணம் எப்படியிருந்தது என்று இலக் கியப் புலவன் சொல்வான். அந்த மணம் உங்களுக்குப் புரியா விட்டால் உங்களுக்குப்புரிந்த மலர் ஒன்றைச் சொல்லி, அந்த மணத் தைப் போன்று இந்த மணம் இருக்கிறதென்று சொல்லி இதை உங்களுக்கு அறிமுகப் படுத்துவான். அந்த அருவியின் கரையில் இருக்கிற காதலன், காதலியர்களைத்தான் ஓவியப் புலவன் காட்டுவான். ஆகவே காதலன். காதலியர் எங்கிருந்து வந்தார்கள் என்பதை இலக்கியப் புலவன் சொல்லுவான், யார் முன்னே வந்தார்கள், யார் பின்னே வந்தார்கள் என்பதை யும் சொல்லுவான். அவர்கள் என்ன பேசினார்கள் என்பதை யும் சொல்லுவான். அவர்கள் பேச என்ன மறந்தார்கள் என்ப தையும்சொல்லுவான். அவன்அவ ளிடத்தில் எதை மறைத்தான் என்பதையும் சொல்லுவான். அவன் விட்ட பெரு மூச்சுக்கு என்ன பொருள் என்பதை அவள் புரிந்து கொள்ளமாட் டாள். ஆனால் இலக்கியப் புல வன் நமக்குப் புரிய வைப்பான்.

இவ்வளவு தன்மையுங்கொண்டு வந்திருக்கிற காரணத்தினா லேயே, தான் எந்த நாட்டிலேயும் இலக்கியத்தை வளர்த்த புலவர் களுக்கிருக்கிற அத்தகைய பெருமையும், புகழும், வேறு எந்தக் கலைகளை வளர்த்தவர் களுக்கும் இல்லை. அகில உலகம் திருவள்ளுவரைப் பற்றியும், தொல்காப்பியரைப் பற்றியும், இளங்கோவைப் பற்றியும், காளி தாசரைப் பற்றியும், ஷேக்ஸ்பிய ரைப் பற்றியும், மில்டனைப் பற்றியும், ஷெல்லியைப் பற்றி யும், வேர்ட்ஸ் ஓர்த்தைப் பற்றி யும், தாந்தேயைப் பற்றியும், புஷ்கினைப் பற்றியும், டால்ஸ்டா யைப் பற்றியும், ஹோமரைப் பற்றி யும் அறிந்து கொண்டிருக்கிற அளவுக்கு வேறு எந்தக் கலை வளர்த்தவர்களையும் உலகம் நினைத்துக் கொண்டிருப்பதில்லை.

காரணம், அவ்வளவு வன்மை பெற்றது இலக்கியக் கலை.

அந்த இலக்கியக் கலைதான், மனிதனுடைய உள்ளத்தை, மாற்றிக் கொண்டு வருவதற்கு, மிகப்பெரிய கருவியாயிருக் கிறது காட்டு மிராண்டி காலத்து மனிதனைப் பண்பாடு மிக்க நாகரிக மனிதனாகப் பண் படுத்திக் கொண்டு வருகின்ற வன்மை இலக்கியக் கலைக்கு மட்டும் தான் உண்டு. பண்பாடு என்பதற்கு Culture என்று சொல்லுகிறோம். Culture என் பதை வைரத்திற்குபயன்படுத்து கிறோம். பண்பாட்டிற்கும் பயன் படுத்துகிறோம். Culture

என்ற வைரம் எவ்வளவு பேர் பெறுகிறதென்றால், எவ்வளவுக் கெவ்வளவு பட்டை தீட்டப்படு கிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஒளி வீசும். ஆகவே எவ்வளவுக் கெவ்வளவு பட்டைகள் விழுகின் றனவோ, அவ்வளவுக்கவ்வளவு வைரம் ஒளி வீசுவதைப்போல உள்ளத்தைப் பண்படுத்தி வருகின்ற காரணத்தினாலேயே தான் பண்பாடு என்று கூறு கிறோம்.

காட்டுமிராண்டி காலத்து மனிதன், பண்பட்ட மனிதனாக மாறுகிறான் என்றால் அது எப்படி? சாதாரண விலங்கி னங்கள், பறவையினங்கள் தங் களுக்கு ஒரு உணர்ச்சி தோன்றி விடுமேயானால், தோன்றிய உணர்ச்சியை உள்ளபடியே வெளியே காட்ட எண்ணும் நாய் குரைக்க வேண்டும என்று எண்ணிவிட்டால் உடனே குரைக்கும். கழுதை உதைக்க வேண்டும் என்று எண்ணிவிட் டால் உடனே உதைக்கும். மாடு முட்ட வேண்டும் என்று எண்ணி விட்டால் முட்டும். குரங்கு குறும்புத்தனம் செய்ய வேண்டும் என எண்ணிவிட்டால் செய்யும். ஆனால் மனிதன் பிறரை அடிக்க வேண்டுமென்று எண்ணுவான். ஆனால் பிறரை அடிக்கக்கூடாது என்று தன்னைத்தானே தடுத்து நிறுத்துவான். ஏனென்றால் அடிப்பது அவ்வளவு நல்லதல்ல என்று உணருகிறான். அடித் தால் அவனுக்கு அடி விழுமே யென்று எண்ணுவான். அவன் திருப்பி அடித்தால் நமக்கு வலிக்குமேயென்று எண்ணு வான். நாம் அவனை அடிப்பதன் மூலம் நமக்கு அடிவிழுமோ என்று எண்ணி, அடிக்க எண்ணினாலும் அடிக்காத அள வுக்குத் தன்னைப் பண்படுத்தித் தடுத்து நிறுத்திக் கொள்கிறான். அது மட்டுமல்ல அவன் அடித் தாலும் கூட திருப்பி அடிக் கலாமா, வேண்டாமா என்று எண்ணுவான். ஆகவே திருப்பி அடிப்பவன், சாதாரண மனித னாய்க் கருதப்படுவான். ஆக அடிக்காமல் தன்னைத்தானே காத்துக் கொள்பவன் பண்பு மிக்கவனாகக் கருதப்படுவான். அவன் அடித்தாலும் கூட பரவா யில்லை என்று சொல்லி விட்டு அதற்கு காட்டிக்கொண்டிருப்ப வன் அதைவிட உயர்ந்த மனித னாவான். அடித்தவனுக்கு ஏதா வது நன்மை செய்கிற அளவுக்குத் தன்னுடைய உள்ளத்தைப் பண் படுத்திக் கொண்டு வந்து அடித் தவன் கையிலே அவனுக்கு உதவி செய்கிற அளவுக்குப்பொருளையும் கொடுக்கிறவன் எல்லா மனிதர் களையும் விட சிறந்த ஒரு மனித னாகப் பாராட்டப்படும் அளவுக்கு ஆளாவான். அந்த அளவுக்குப் பண்படுத்திப் பண்படுத்தி வரு கின்ற செம்மையை நாம் பார்க் கிறோம்.

ஏனெனில் உளப் பண்பைப் பொறுத்துதான் அத்தனையும் அமைந்திருக்கின்றன.

ஆகவே உள்ளத்திற்குச் சிறந்த பண்புகளுக்கு மக்கள் காப்

பொழுது மதிப்பு தருகிறார்களோ, அன்புக்கும் அருளுக்கும் ஈவுக்கும் இரக்கத்திற்கும், பிறருக்கு நன்மை செய்கின்ற பண்பிற்கும் எவ்வளவுக்கெவ்வளவு மதிப்புத்தர முன் வருகிறார்களோ, அப்பொழுதுதான் மனித சமுதாயம் உயர்ந்த சமுதாயமாக வாழ முடியும்.

ஈதல் இசைபட வாழ்தல், அது அல்லது ஊதியமில்லை. உயிர்க்கென்று வள்ளுவர் மிக அழகுபட எடுத்துக் கூறினார். உலக வாழ்வினுடைய குறிக்கோளே ஈதலும் அதன் மூலம் வருகின்ற புகழோடு வாழ்தலும் ஆகும். இதைத் தவிர வேறு எதுவும், உயிர் வாழ்க்கையின் ஒரு குறிக்கோளாக இருக்க முடியாதென்று வள்ளுவர் மிக அழகுபட எடுத்துக் கூறினார்.

ஈதலின் மூலமாகத்தான் உலகம் உய்யமுடியும். ஏனென்றால் மனித சமுதாயத்திற்கிருக்கின்ற தேவை அத்தனைபேர்களுக்குமிருக்கிற தேவை ஒன்றாக அமைகிறது. கிட்டத்தட்ட அத்தனை பேருக்கும் தேவையான காற்று ஒரே அளவுதான். அத்தனை பேருக்கும் தேவைப்படுகிற இடமும் அவ்வளவுதான்; அத்தனை பேருக்கும் தேவைப்படுகிற படுக்கையும் அவ்வளவுதான்.

உயிர் வாழ்க்கைக்குத் தேவைப்படுகின்ற அடிப்படை பொருள் அத்தனை பேருக்கும் ஒன்றுதான். ஆனால் அதை நிறைவேற்றித் தருகின்ற ஆற்றல்தான் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது.

எல்லோருக்கும் ஒருவித ஆற்றல் அமைகிறதில்லை. எல்லோருக்கும் ஒரேவித அறிவு அமைகிறதில்லை. அறிவுடையவர்களும் ஆற்றலுடையவர்களும் தங்களுடைய அறிவால், ஆற்றலால், மனித சமுதாய வாழ்விற்குத் தேவையானவைகளை ஈட்டி, அற்றவர்களுக்கு அதை ஈந்தால் தான், மற்றவர்களும் உயிர்வாழ முடியும். எனவேதான். வள்ளுதர் 'வறியார்க்கு ஒன்று-ஈவதே ஈகை" என்று கூறினார்.

எதெதிலே யார் யார் வசதி உடையவர்களோ, அதிலே அவர்கள் இல்லாதவர்களுக்கு ஈய வேண்டும். உலகத்திலிருக்கிற பேறிஞர்கள், பெருமக்கள் அத்தனை பேரும் இதைத்தான் எடுத்துச் சொன்னார்கள்.

ஈகையின் மூலம் வருகின்ற புகழிலேதான் ஒருவன் வாழ முடியும். இன்றைக்கு உலகத்திலே 320 கோடி மக்கள் வாழ்கின்றார்கள் என்றாலும் கூட, இதற்கு முன்னால் எத்தனையோ 300 கோடி. 320 கோடி மக்கள் பல நூற்றுக்கணக்கான கோடி மக்கள் பிறந்து இருந்து செத்து, மடிந்து, புதை குழிக்கும் சுடுகாட்டிற்கும், போயிருக்கிறார்களென்றாலும், இந்த உலகம் அவ்வளவு பேரையும் நினைவில் வைத்துக்கொள்ளவில்லை; விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத்தான். ஒரு புத்தர், ஒரு ஏசு, ஒரு நபி நாயகம், ஒரு

சாக்ரடீஸ், ஒரு ஆபிரகாம் லிங்கன், ஒரு காந்தியார் என்று இப்படி விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரைத்தான் நூறாண்டு நூறாண்டாக இந்த உலகமானது நினைவிலே வைத்துக் கொண்டிருக்கிறது.

காரணம், அவர்கள் வாழ் நாளிலே தங்களுடைய அறிவை, ஆற்றலை, உழைப்பை, நேரத்தை நினைப்பை சமுதாயத்திற்கு ஈந்தார்கள். ஈந்ததின் மூலமாகப் புகழ் பெற்றார்கள், அந்தப் புகழ் என்றென்றும், தொடர்ந்து வரக் கூடியநிலைமைகளிலிருக்கக்காணு கிறோம்.

அந்தப் பண்பாட்டைப் போற்றிய நாடு மிக நிம்மதியாக வாழு கிறது. அந்தப் பண்பாடுகளைப் போற்றத் தவறிய நாடுகள் இடுக் கண்களிலே, இன்னல்களிலே, துயரங்களிலே, ஈடுபட்டு, அதிலே சுழன்று, திக்கு முக்காடிக் கொண்டிருக்கின்றன.

எனவே போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்ற அளவுக்கு உள்ளத்தைப் பண்படுத்திப் பண்படுத்தித் தானும் வாழ்ந்து மற்றவர்களை யும் வாழவிடவேண்டும்.

புறத்தோற்ற நாகரிகத்திற்கு அறிவியல் காரணமென்றால், மனிதனுடைய அகத்தோற்றப் பண்பாட்டிற்குக் கலையியல் காரணமாக அமைகிறது.

எனவே கலையையும் அறிவியலை யும், மிக நன்றாக வளர்த்து, நாகரிகத்தையும் பண்பாட்டை யும் சிறப்பாக வளர்க்க ஒவ்வொரு நாடும் கடமைப் பட்டிருக் கின்றது.

எங்கெந்த நாடுகள் அதை வளர்த்து வருகின்றனவோ அந்த நாடுகள் எல்லாம் சிறந்தனவாக இருக்கின்றன. பண்டைக் கிரேக்கம் அந்த வகையிலே சிறந்து விளங்கியது.

உலகத்திலே மற்ற நாட்டோடு ஒப்பிட்டு பார்க்கும்போது அந்தப் நிலை இந்த நாட்டைப் பொறுத்த வரையிலும் தளர்ந்திருக்கிறது. அதை மீண்டும் ஊக்குவிக்க வேண்டிய பொறுப்பு இன்றைக்கு வாழுகிற தமிழகப் பெருங்குடி மக்களுடைய நீங்காக் கடமை யாகும் என்று கூறி "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என முழங்கி முடிக் கிறேன்.

"முரசொலி"

எதனையும் பரபரப்புடன் இயற்றுதல் தகாது. தூய்மை, பொறுமை, விடா முயற்சி—இம்மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை; அனைத்துக்கும் மேலாக, அன்பும், காலம் முழுவதும் உன்னதே. ஆகவே அழகற்ற பரபரப்பு வேண்டா.

—விவேகானந்தர்

தலைச்சுற்று ஏற்படுவது ஏன்?

ஹெரால்ட் ஷிரையாக், எம். டி.

குழந்தைகளுக்கு விருப்பமான ஒரு விளையாட்டு தட்டாமாலை. சில குழந்தைகள் தலை கிர்ரென்று சுற்றும் வரையில் சுற்றி ஆடுவார்கள். அதிலே ஒரு தனி உற்சாகம் அவர்களுக்கு. ஏனெனில் தலை சுற்றும் பொழுது, அது மட்டுமா சுற்றுகிறது? பக்கத்தில் நிற்கும் பிள்ளைகளும் மரங்களும் வீடுகளும் அல்லவா சுற்றுவது போல் அவர்களுக்குத் தோன்றும். பிள்ளைகள் நினைத்த நேரத்தில் தலையைச் சுற்ற வைக்கவும் முடியும்; நினைத்த நேரத்தில் அதை நிறுத்தவும் முடியும்.

ஆனால் வயது முதிர்ந்த பிறகு தலைச்சுற்று ஏற்படுவது இப்படி ஒரு விளையாட்டுக் காரியம் அல்ல அது ஒரு நோய்க் குறி. சில நோய்களில் அதுவே முதல் அறிகுறியாகக் காணும். நோய் இன்றியும் அது உண்டாகக் கூடும். ஆனால் காரணம் எது ஆயினும், திடீரெனத் தலை சுற்றினால், யாருக்குமே சிறிது அச்சமாக இருக்கும்; என்னவோ ஏதோ என்று கலக்கம் அடைவோம்.

தலைச்சுற்று ஏற்படுகிற பொழுது, உண்மையில் நாமோ, அல்லது நம் அருகில் இருக்கும் பொருட்களோ அசையாவிடினும், அசைவது போன்ற உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. இந்த உணர்ச்சி எப்படி ஏற்படுகிறது என்று இன்று படிக்கப் போகிறோம், ஆனால் அதற்கு முன் இந்த விஷயத்தோடு தொடர்பு உடைய வேறொரு விஷயத்தைக் கவனித்தாக வேண்டும். அதாவது, பொருட்கள் அசைவது, ஒரு நிலையினின்று இன்னொரு நிலைக்கு மாறுவது நமக்கு எப்படிப் புலப்படுகிறது?

முதலாவதாக, நமது கண்களால் கண்டு அறிகிறோம். நம் அருகில் இருக்கும்பொருட்களில் ஒன்று மட்டும் இடமாறினால், அந்தப் பொருள் அசைகிறது என்று முடிவுசெய்வோம். ஆனால் நமது சுற்றுப்புறம் முழுவதுமே நமக்குப் பின்னிட்டு மறையக் கண்டால், நமது உடல் அசைகிறது என்று அறிந்து கொள்வோம்.

இரண்டாவதாக, உடலின் பல் வேறு தசைகளினின்றும் மூட்டுகளினின்றும் மூளைக்கு வரும் உணர்ச்சிகளினாலே உடலின் அசைவுகளை அறிகிறோம். சான்றாக, நமது முழங்கால்முட்டு வளைந்திருக்கிறதா, தலை வலது பக்கம் திரும்புகிறதா இடது பக்கம் திரும்புகிறதா, வலது கை உடலை ஒட்டியவாறு தொங்குகிறதா அல்லது உடலை விட்டு விலகிச் செல்கிறதா என்று மூளைக்கு வரும் இந்த உணர்ச்சிகளாலேயே அறிந்துகொள்

கிறோம். இவ்வுணர்ச்சிகளின் சேர்க்கையே ஒரு குறித்த நேரத்தில் உடல் எந்த நிலையில் இருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ள உதவுகிறது.

மூன்றாவதாக, அரைவட்டக் குழாய்களினால் தலையின் அசைவுகளை அறிகிறோம். இந்தக் குழாய்கள் உட்செவியில் பக்கத்துக்கு மூன்று வீதம் இருக்கின்றன. இவற்றில் ஒரு வித நீர் நிறைந்திருக்கும். தலை அசையும் போதெல்லாம், அதுவும் அசையும். இந்நீர் அசைவுகள் உடனுக்குடன் மூளைக்கு அறிவிக்கப்பட்டு, மூளையால் பொருள் கொடுக்கப் பெறுகின்றன. இதனால் ஒவ்வொருகணமும் தலை எந்த நிலையில் இருக்கிறது. எந்தப் பக்கம் சாய்ந்திருக்கிறது என்பதை எல்லாம் நம்மால் அறிய முடிகிறது.

இந்த மூன்று வகை உணர்ச்சிகளும் (பார்வை, தசைகளினின்றும் மூட்டுகளினின்றும் வரும் உணர்ச்சிகள், அரை வட்டக் குழாய்களினின்றும் வரும் உணர்ச்சிகள்) மூளையில் தத்தமக்குரிய இடத்தில் ஏற்கப்பட்டு, உடனேயே ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுகின்றன. இந்த வேலை மூளையில் ஓயாது நடந்து கொண்டிருக்கிறது. ஆயினும் இப்படி நடக்கிற உணர்ச்சி நமக்கு உண்டாவதில்லை. அத்தனை நுட்பமாக அது நடக்கிறது.

உடலின் இருக்கையையும் நாம் அறிய உதவும் இம் மூன்று சாதனங்களிலும் இங்கு முக்கியமாக அரைவட்டக் குழாய்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். ஏனெனில் இந்தக் குழாய்கள் சரியாகச்செயல் புரியாதபொழுதே, தலைச்சுற்று உண்டாகிறது.

நாம் ஓர் இடத்தில் உட்கார்ந்திருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம், அப்பொழுது தலையின் இரு பக்கத்து அரைவட்டக் குழாய்களிலிருந்தும் மூளைக்கு ஒரே மாதிரியான நரம்புத் துடிப்புகள் வரும். ஆனால் எழுந்து நடக்கத் தொடங்கினால், ஒரு பக்கக் குழாய்கள் சிறிதளவு வேற்றுமையாகத் தூண்டப்படும். எனவே இடது பக்கத்திலிருந்தும் வலது பக்கத்திலிருந்தும் வெவ்வேறு விதமான துடிப்புகள் வரும். இதனால் உடல் இயங்குகிறது. நாம் நடக்கிறோம் என்றுதெரிந்து கொள்கிறோம். ஆனால் அமைதியாக அமர்ந்திருக்கையிலேயே இட, வல அரை வட்டக் குழாய்களினின்றும் தம்முடன் வேறுபாடான துடிப்புகள் வரின், உடல் இயங்குவது போன்ற உணர்ச்சி உண்டாகும், ஆயினும் நாம் உட்கார்ந்து தான் இருக்கிறோம் என்பதைநாம் அறிவோம். இந்தப் பிறழ்நிலையே தலைச்சுற்று உணர்ச்சியின் அடிப்படை ஆகும்.

தலையின் இரு புறங்களினின்றும் வேறுபாடான உணர்ச்சிகள் வருவதற்குக் காரணம் யாது? ஒரு பக்கத்துக் குழாய்களில் ஏதோ ஒரு விதத்தில் உறுத்தல் உண்டாகியிருக்கலாம்; அல்லது அவற்றில் முழு அல்லது அரை குறையான செயலுறவு உண்டாகி

யிருக்கலாம். தலைச்சுற்று உண்டாவதற்கு வேண்டுவதெல்லாம் இரு புறங்களினின்றும் இயல்பு நிலைக்கு மாறாக வேறு வேறான உணர்ச்சிகள் வரச் செய்வதேயாகும்.

எல்லாருக்கும் ஒரே மாதிரியான அரைவட்டக் குழாய்கள் இருப்பதில்லை. சிலர் குழாய்கள் மிகவும் உணர்ச்சியுள்ளவை; எளிதாகக் கிளர்ச்சியுறக் கூடியவை; அன்னாருக்கு மிகச்சிறிய தூண்டுதல்களினால் தலைச்சுற்று உண்டாகும்; மற்றவர்களுக்கு அப்படி உண்டாகாது. எடுத்துக்காட்டாக, நடனத் தொழிலாளர்களுக்குத் தலை சுற்றுவது அரிது. நாள்தோறும் ஆடி ஆடி, துரித உடல் இயக்கத்தினால் விளையும் உணர்ச்சிகளுக்கு அவர்கள் பழக்கப்பட்டு விடுகிறார்கள். இதனால் அவர்களுக்கு இத் தொந்தரவு ஏற்படுவதில்லை. ஆனால் சிலருக்குப் பஸ் அல்லது விமானத்தில் சிறிது தொலைவு பயணம் செய்தாலும், தலைச்சுற்று உண்டாகும்.

இனி, சாதாரணமாகத் தலைச்சுற்று உண்டாகும் நோய்களைக் குறிப்பிடுவோம், இவ்விடத்தில் மேலே சொன்ன ஒரு செய்தியை மீண்டும் அழுத்தமாகச் சொல்ல வேண்டும். தலை சுற்றுவது ஒரு நோய்அன்று; அது ஓர் அறிகுறி. அதற்குக் காரணமான நோய் அற்ப நோயாகவும் இருக்கலாம், மிகவும் மோசமான நோயாகவும் இருக்கலாம். ஆதலால் எவருக்கேனும் திடீரெனத் தலைக் கிறுகிறுப்பு ஏற்பட்டால், அதன் காரணத்தைக் கண்டு பிடிக்க முயல வேண்டும். இதற்குப்பூரண மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது இன்றியமையாததாகும்.

ஒரு சாதாரண காரணம் தலையில் பலமான அடி அல்லது காயம் படுவதன் விளைவாக ஒரு பக்கத்தில் உள்ள அரைவட்டக் குழாய்கள் பழுதாகும். இதனால் அப்பக்கத்திலிருந்து வரும் உணர்ச்சிகள் மறு பக்கத்திலிருந்துவரும் உணர்ச்சிகளினின்று வேற்றுமையாக இருக்கும். இவ்வாறு இரு விதமான இயக்க உணர்ச்சிகள் வருவதால், குழப்பம் ஏற்பட, தலைச்சுற்று உண்டாகிறது. அதிர்ஷ்ட வசமாக, இவ்விதத்தில் தொந்தரவுஉண்டாகப் பெற்றவர்கள் சில வாரங்களுக்குள் இதைத் தவிர்க்கக் கற்றுக் கொள்ளலாம். வேண்டியதெல்லாம் பீதி அடையாமையும் பிடிவாதமான முயற்சியுமே ஆகும்.

மற்றொரு காரணம் மூளையில் குழலை வளருதல். இந்த வளர்ச்சிகள் அரைவட்டக் குழாய்களினின்று துடிப்புகளைக் கொண்டு வரும் நரம்புகளைப்பாதிக்கின்றன.

சில இரத்தக் குழாய் நோய்களிலும், முக்கியமாக, இரத்தக் குழாய்களின் சுவர்கள் இறுகித் தடிக்கும் நோயில், அரைவட்டக் குழாய்கள் பாதிக்கப்படுவதுண்டு ஒரு பக்கத்தில் உள்ள குழாய்களில் இரத்த ஓட்டம் குறைந்து போகலாம். இதனால் இரு புறங்களினின்றும் வேறு வேறான உணர்ச்சிகள் வர, தலைச்சுற்று

உண்டாகும். இத் தலைச்சுற்று நீடித்திருக்கும். ஏனெனில் இதன் அடிநிலையில் உள்ள வியாதியைக் குணமாக்குவது கஷ்டம்.

புட்டாலம்மை, மூளையழற்சி போன்ற நோய்களில் சில சமயம் தலைச்சுற்று உண்டாகும் அளவுக்கு அரைவட்டக் குழாய்கள் பழுது அடையக் கூடும். அளவு மீறி மருந்து உட்கொள்ளவும் இக் குழாய்களைப் பாதித்து தலைச்சுற்றை உண்டுபண்ணலாம். சில கிருமி நோய்களின் நஞ்சினுலும் இப்படி ஏற்படுவதுண்டு.

எனக்குத் தெரிந்த ஓர் இளம் பெண் அடிக்கடி தலைச்சுற்றினுல் அவதிப்பட்டாள். நெடு நாளாக அதன் காரணம் தெரியவில்லை. ஒருவேளை அலெர்ஜியாக இருக்கலாமோ ? என்று பரிசோதித்துப் பார்த்தோம். இறுதியில் விரோதப்பொருளைக்கண்டுபிடித்தோம் தபால் தலைப் பிசின்! தபால் தலைகளின் பின்புறம் பூசும் பிசினின் கூட்டுப் பொருள்களில் ஏதோ ஒன்று அவள் உடம்புக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அந்த யுவதிக்கு ஒரு புத்தக வெளியீட்டகத்திலே வெளிச் செல்லும் கடிதங்களுக்கும் சிப்பங்களுக்கும் தபால் தலை ஒட்டி அனுப்பும் வேலை, சில சமயம் வேலை அவசரத்திலே தபால் தலைகளை நாக்கினுல் நனைத்து ஒட்டுவாளாம். இதன் விளைவு தான் அவள் தலைச்சுற்று! இதன் பின்னர் அவள் தபால் தலைகளை நனைப்பதற்கு எப்பொழுதும் கடற்பஞ்சையே உபயோகித்தாள். அத்தோடு அவள் உபத்திரவமும் தீர்ந்தது. விரோதப் பொருட்களின் எதிர்வினையால் அரைவட்டக் குழாய்களின் மென்மையான திசுக்கள் வீங்கிப்போய் அல்லது உறுத்தல் அடைந்து, தலைச்சுற்றை உண்டு பண்ணும் போலும்.

உள்வடிச் சுரப்பிகளின் வேலையில் கலக்கம் ஏற்படுவதன் விளைவாகவும் மிதமான தலைச்சுற்று உண்டாகக் கூடும். சில பெண்களுக்குப் பூமாறு காலத்திலே, அதாவது 40–50 வயதுக்கு இடையில் அடிக்கடி தலைச்சுற்று உண்டாவதற்கு இதுவேகாரணம் என்பதில் ஐயம் இல்லை.

ஆனுல் பெரும்பான்மையான கேசுகளில் உளவியல் காரணங்களாலேயே, அதாவது, மனப்பதற்றம், நீடித்த கவலை, நீடித்த சோகம், மனத்தில் எழும் வெறுப்பையும் கோபத்தையும் அடக்கி வைத்துக்கொண்டிருத்தல், இம்மாதிரி காரணங்களாலேயே தலைச்சுற்று உண்டாகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஓர் இளம்பெண் தற்கொலை செய்துகொண்டாள். அதன் பின் அவள் கணவனுக்கு அடிக்கடி தலைச்சுற்று மயக்கம் உண்டானது. நீதிமன்றத்திலே வழக்கு தோற்றுவிட்டது, நாற்பது வயதுப் பிரதிவாதிக்கு. அன்று தான் அவருக்கு முதல் தடவையாகத் தலைசுற்று உண்டானது. இன்னொரு மனிதர் ஒரு நாள் பொழுது போகாமல் மாடி அறையிலே பழைய சாமான்கள் போட்டு வைத்திருந்த பெட்டி

-யைத் திறந்து பார்த்தார். ஒரு பழைய கடிதம் அவர் கண்ணில் பட்டது. பிரித்துப் படித்தார் தலை கிர்வென்று சுழன்றது வெகு காலத்திற்கு முன் குடும்பத்தில் நடந்த ஒரு சோக சம்பவம் அதில் எழுதப்பட்டிருந்தது.

இப்படி உள்ளக்கிளர்ச்சிகளாலும் கவலைகளாலும் தலைச்சுற்று உண்டாவதற்கு, அவற்றால் அரை வட்டக் குழாய்களில் என்ன கெடுதி ஏற்படுகிறது என்று திட்டமாகச் சொல்ல இயலாது. ஒரு கால் அங்கு உள்ள இரத்த ஓட்டம் பாதிக்கப்படலாம்.

தொடக்கத்தில் சொன்னபடி, திடீரெனத் தலைச்சுற்று உண்டானால், அலட்சியமாக இருந்து விடக் கூடாது. உண்மையைச் சொன்னால், இதில் அடைவது ஒருவிதத்திலே நல்லது. மருத்துவரிடம் ஓடுவோம், அல்லவா? உடலிலே ஏதேனும் நோய் இருந்தால், அதற்குத் தகுந்த பரிகாரம் செய்துகொள்ள வேண்டும். ஆனால் தமனிக்கடினை போன்ற நோய்களை எளிதில் பரிகரிக்க முடியாது. எனவே தலைச் சுற்று நீடித்து நிற்கும். அதைச் சகித்துக்கொள்ளவும், அதை வைத்துக்கொண்டு வாழவும் பழகிக் கொள்ள வேண்டும். துயரங்கள் இருக்குமாயின், தமது புத்தியாலும்மனத்துணிவாலும் இறை நம்பிக்கையாலும் அவற்றைப் போக்கிக்கொள்ள வேண்டும். மனத்திற்குத் திடீரெனக் கிளர்ச்சிகளை வருவிக்கக் கூடாது. மனத்தின் அதிர்ச்சி கூடவே கூடாது. அமைதியாக, மகிழ்ச்சியாக வாழ முயல வேண்டும்.

"நல்வழி"

புதுமுறை சங்க வாய்பாடு

V.K. சேஷாத்திரி. B.A., L.T.

(Retired Dpeuty Inspector of schools.)

புதிய மெட்ரிக், நயாபைசா திட்டப்படி எளிய முறையில் மாணவர்களுக்குச் சுலபமாகப் புரியும் வகையில் புது முறை சங்க வாய்பாடு இயற்றப் பெற்றிருக்கிறது.

தனிப் பிரதியின் விலை ரூ. 0- 13 ந. பை. 100 வாய்பாடு மொத்தமாக வாங்குபவர்களுக்கு 100 பிரதிகள் ரூ. 9 வீதம் கொடுக்கப்படும். அதற்குக் குறைந்து, புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 25% கழிவு கொடுக்கப்படும்.

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

கம்பன் காட்டும் மேழிச் செல்வம்

பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார்,
(திருவேங்கடவன் பல்கலைக் கழகம், திருப்பதி)

பன்னெடுங் காலமாகவே நம் நாடு உழவுத் தொழிலில் தலை சிறந்து விளங்கிய நாடாகும். இது பற்றியே தமிழ் மூதாட்டியாராகிய அவ்வையார் 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்று கூறிப்போந்தார். புறநானூற்றுப் புலவரும்,

'ஒருபிடி படியும் சீறிடம்
எழுகளிறு புரக்கும் நாடுகிழ
வோனே

என்று நிலவளத்தைப் புலப்படுத்தியுள்ளார். ஒரு பெண் யானை படுத்துறங்கும் சிறிய இடத்தில் ஏழு ஆண் யானைகட்கும் போதுமான அளவு விளைந்தன என்பதாகக் குறிப்பிடுகின்றார். இங்ஙனம் பண்டு தொட்டு இன்று வரை புலவர்களால் புகழ்ந்து பாடப்பெற்ற நாட்டில் இன்று உணவுப் பஞ்சம்! உணவுப் பங்கீட்டு முறை வெளி நாடுகளினின்றும் உணவுப் பொருள்களை இறக்குமதி செய்தல், உணவுப் பெருக்கத் திட்டம் இவைபற்றி அரசினர் ஆய்ந்து வருகின்றனர். தலைவர்கள் மேடைகளிலும் முழக்கம் செய்து வருகின்றனர். இத்தகைய அவல நிலைக்குக் காரணம் என்ன? மக்கள் தொகை பெருக்கம், மேழிச் செல்வத்தில் தக்க கவனம் செலுத்தாமை, அரசினர் கொள்கைகளில் உள்ள குறைகள் இன்னோரன்னவைகாரணங்களாகும். இந்நிலையில் அரசினர் "ஏர் முனை விழா" கொண்டாடும் திட்டத்தை வகுத்து வருகின்றனர். இத்திட்டம் வன மகோத்சவம் போல் ஆகிவிடக் கூடாது என்பதுதான் நம் கவலை. இந்தக் கட்டத்தில் கம்பன்கூறும் மேழிச் செல்வத்தைப் பற்றி ஆராய்தல் மிகவும் பொருத்தமாகும்.

கம்பன் தமிழக வளத்தைக் கண்டு கோசல நாட்டு வளத்தைப் பேசுகிறான். இந்த நாட்டில் அருமையான பொருள்கள் மிகுதியாக விளைவதால் அவற்றில் வேண்டியன போக எஞ்சியவற்றை வேற்று நாட்டிற்கு மரக் கலங்களில் ஏற்றிச் சென்று அங்கு இறக்கிய பிறகு அம்மரக்கலங்கள் அப்பாரத்தைச் சுமத்தலாலாகிய வருத்தத்தை நெய்தல் நிலத்தில் (கடலில்) ஆற்றிக் கொள்கின்றன.

நிறைபரம் சொரிந்து வங்கம்
நெடுமுதுகு ஆற்றும் நெய்தல்.
நிறைபரம்-நிறைந்தபாரம்;

[நிறை பரம்-நிறைந்த பாரம்: வங்கம்-கப்பல். என்பது கம்பன் வாக்கு]

இங்ஙனம் மக்கள் வாழ்க்கைக்கு உயிர் நாடியாக உள்ள மேழிச் செல்வத்தைப் போற்றும் வகையில் "ஏரெழுபத்து" என்ற ஒரு சிறு நூலையே இயற்றியுள்

ளான் கம்பநாடன். இந்நூல் கம்பனுடையதா? அல்லது பிற்காலத்துப் புலவர் யாரோ ஒருவர் இயற்றிக் கம்பன் இயற்றினதாக அவனுடைய பெயரை ஏற்றி விட்டாரோ என்று ஆராய்ச்சியில் நாம் இப்போது இறங்க வேண்டாம். அவன் மேழிச்செல்வத்தை எங்ஙனம் பாராட்டியுள்ளான் என்பதை மட்டிலும் ஈண்டுக் காண்போம்.

உழவர் சிறப்பு

அழுங்குழவியை எடுத்தணைக்கும் தாய் போன்று தம்மிடம் எழும் கருணையால் அனைத்துயிர்களையும் காக்கும் பண்புடையவர்கள் உழவர்கள். இவ்வுலகைப் படைத்த நான்முகன் இவர்களைத் தான் முதலில் உலகை முதல் கருவாகப் படைத்தான். வேதியர்கள், உயர்குலமும் விறல் வேந்தர் பெருங்குலமும் தாயனைய உழவர் குலத்துக்கு ஈடாகாது என்பதைப் பன்னியுரைக்கவேண்டியதில்லை என்பது கவிஞனின் கருத்து. உழவர்கள் ஏர் விழாக் கொண்டாலன்றி முடிசான்ற மன்னர்களும் போர் விழாவினை மேற்கொள்ள இயலாது. காரணம் அவர்களது செங்கோலை நடத்தும் கோலும் உழவர்களின் ஏர் அடிக்கும் சிறு கோலன்றோ? இது கருதியே வள்ளுவப் பெருந்தகையும் "உழுவார் உலகத்துக்கு ஆணி" என்று கூறிப் போந்தார். இதனையே கம்ப நாடன் பிறிதோரிடத்தில் "ஓராணித் தேரினுக்கும் உலகங்களனைத்தினுக்கும் பேராணிப் பெருக்காளர்"? என்று சிறப்பிப்பான். இன்னும் வள்ளுவரின் கருத்தினைத் தழுவியே,

"உழுதுண்டு வாழ்வாரே
வாழ்வார் மற்றெல்லாரும்
தொழுதுண்டு பின்செல்வார்
என்றே இத் தொல்லுலகில்
எழுதுண்ட மறையன்றோ."

என்று உழுநரின் சிறப்பினை வலியுறுத்துகின்றான். கவிஞன் பிறிதோரிடத்தில் உழவர்களைத் தவிர உலகினை ஊட்டுவார் பிறர் உளரோ என்றும், "பகடு, பூட்டுவார் புகழன்றிப் பிறர் புகழும் புகழாமோ?" என்றும் சிறப்பித்துப் பேசுகிறான். மேலும்

"வேதநூல் முதலாகி
விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவார் எல்லோரும்
உழவார்தம் தலைக்கடைக்கே"

என்று முத்தாய்ப்பு வைத்து விடுகிறான்.

உழவின் சிறப்பு

உழவுத் தொழில் செவ்வனே நடைபெற்றால் குற்றமில்லாத வான் மறைகள் சிறப்பாகப் பொலிவுறும்; அந்தணர்கள் இயற்றும் வேள்விகள் விளக்கமுறும்; கலைகள் யாவும் சிறக்கும்; புலவர்கள் வாயில் நாமகள் தாண்டவமாடுவாள். நாட்டில் இலக்குமியின் கருணை கரை புரண்டோடும்; மழையின் இன்றியமையாமையும் பயனுறும்; அரச நீதியும் சிறந்து விளங்கும். உழவர்களின் ஏர் நடப்பதனால்தான் உலகில் எல்லாச் செயல்களும் நடை

பெறுகின்றன என்றும் ஆனால் பசிமட்டிலும் 'நடக்காது' என்றும் சமத்காரமாகப் பேசுகின்றான் கவிஞன்.

கார்நடக்கும்; படிநடக்கும்;
காராளர் தம்முடைய
ஏர்நடக்கும்; எனில்புகழ்சால்
இயல்இசைநா டகம் நடக்கும்;
சீர்நடக்கும்; திறம்நடக்கும்;
திருவறத்தின் செயல்நடக்கும்;
பார்நடக்கும்; படைநடக்கும்;
பசிநடக்க மாட்டாதே.

என்பது கவிஞனின் வாக்கு.

கருவிகளின் சிறப்பு

உழவினைச் சிறப்பிக்கும் முகத்தான் உழவுக் கருவிகளையும் சிறப்பிக்கின்றான். முதல் முதலாக மேழியின் சிறப்பினைக் கவிஞன்,

வாழி நான் மறையோர்கள்
வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியால் உலகுஅளிக்கும்
ஆடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபே ரினும்பெயரா
உரையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதல்லால்
வேறொன்றால் விளையாவே,

[பெருக்காளர்–வேளாளர், உழவர்]

என்று பாராட்டுகின்றான். அடுத்து ஏர் விழாவினைக் குறிப்பிடுகின்றான். உழவர்கள் ஏர் விழாவினை மேற்கொள்ளாவிடில் நான்கு விதப் படைகளையும் உடைய பேரரசர்கள் போர் விழாவினை மேற்கொள்ள இயலாது என்று புலப்படுத்துகின்றான். வட எல்லையில் பகைவர்கள் "போர் முஸ்தீப்பு" செய்து கொண்டுள்ள இன்றைய நிலையில் 'போர் முனையை' மேற்கொண்டிருக்கும் நாம் முதலில் 'ஏர் முனையை' ஏற்படுத்தி உணவுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டியவர்களாக உள்ளோம். இதனை நன்கு உணர்ந்த கம்பநாடன்.

"மடைவாளை வருபொன்னி
வளநாடர் தங்கள் கலப்
படைவாளைக் கொண்டன்றிப்
பகையறுக்கமாட்டாரே"

என்று பேசுகின்றான்; உலகியலை உணர்த்தும் கவிஞன் கூறும் உண்மையை உன்னுந்தோறும் உவகை பொங்குகின்றதன்றோ? இதனைத் தொடர்ந்து ஊற்றாணி, நுகத்தடி, நுகத்துளை, நுகத்தாணி, பூட்டாங்கயிறு, கொழு, கொழுவாணி, தாற்றுக்கோல், உழுவெருது, அதன் சுவற்கறை-இவற்றின் சிறப்பு பேசப் பெறுகின்றன. எருதுகளிரண்டினையும் கொழுநுகத்தோடு பூட்டும் பூட்டாங்கயிறே "புவிமகள் மங்கலக் கயிறாகும்" என்பது கவிஞனின் திடமான நம்பிக்கை. வான மழை பொழிந்தாலும் நிலம் வளம் பெறுவதும், ஞான மறையவர் வேள்வி நலம் பெறுவதும், சேனையுடன் செருக்களத்தில் சென்று பெரும் மன்னவரின் யானை வலி பெறுவதும் உழவருடைய எருதுகளின் வலியால்தான் என்று கூறி, உழவெருதுகளைச் சிறப்பிக்கின்றான். எருதின் கழுத்தில் நுகத்தினால் ஏற்பட்டகறையை மண்ணவர்க்கு அமுதூட்டி வானவரையும் வாழ்

விக்கும் என்பது கவிஞனின் கருத்து. இதனை,

கண்ணுதலோன் தனதுதிருக்
கண்டத்தில் படிந்தகறை
விண்ணவரை அழுதூட்டி
விளங்குகின்ற கறைஎன்பர்;
மண்ணவரை அமுதூட்டி
வானுலகம் காப்பதுவும்
எண்ணருஞ்சீர்ப் பெருக்கா
எருதுசுவல் இடுகறையோ.
(சுவல் - கழுத்து)

என்று நெற்றிக் கண்ணனின் திரு நீலகண்டத்துடன் இணைத்துப் பேசுகின்றான்.

உழவின் சிறப்பினை ஒருவர் சொல்லித் தெரிய வேண்டிய தில்லை. உண்டி சுருங்கினால் இது தானாகவே தட்டுப்படும். உழவின் சிறப்பினை இன்று நாம் நன்கு உணர்கின்றோம். உணவுப் பொருள் கடையின் முன் 'க்யூ' வரிசையில் நிற்பவர்களின் காட்சியும் நிற்பவர்களின் கால் கடுப்பும், உணவு விடுதிகளில் உணவு அளவு உண்பவர்களும் இதனை நன்கு உணர்வர். "உலகெலாம் ஒளி விளங்கும் உழவர் உழும் உழவாலே" என்று உழவின் சிறப்பினைத் தொகுத்துப் பேசிய கவிஞன் அதனை வகுத்தும் பேசுகின்றான். ஈண்டு விரிப்பின் அது பெருகும்.

அடுத்து, பைங்கூழின் சிறப்பு பகரப் பெறுகின்றது. பச்சைப் பசேல் எனப் பைங்கூழ் தழைத்துக் கோடு கொள்ள வேண்டுமாயின் அதனைச் சூழ்ந்து முளைக்கும் களைகளைக் களைதல் வேண்டும். செஞ்சாலி, தழைத்துக் கருவடைந்தால் உலகமெல்லாம் உயர்ந்தோங்கும்; கலியும் நீங்கும். பைங்கூழ் வளர்ந்து படுங்கதிர் விடுவதற்கு வெண் கதிரோன் வெப்பமும் தண் மதியின் கருணையும் துணை செய்கின்றன. இவற்றின் துணையால் காராளர் வளர்க்கும் கதிர் உயிர்களை வளர்க்கின்றது. இதனைக் கவிஞன்,

"முதிராத பருவத்தும்
முற்றியநற் பருவத்தும்
கதிராகி உயிர்வளர்ப்ப(து)
இவர்வளர்க்கும் கதிரன்றோ

என்று கூறுகின்றான். இப்பசுங்கதிர் முற்றி நெற்குலையாக விளைதலின் சிறப்பினைக் கவிஞன் மிகச் சமத்காரமாகப் பேசுகின்றான். செஞ்சாலிக்குலை வளையுங்கால் புவிவேந்தர் அங்கையில் தங்கிய வீரச் சிலை வளைகின்றது; மாரனின் கரும்புச் சிலை வளைகின்றது; கொடுங்கலியின் தலையும் வளைகின்றது. ஆனால் அரசனின் செங்கோல் மட்டிலும் வளைவதில்லை. அரிசூட்டின் சிறப்பினைக் கவிஞன்,

"பீடுவாம் பிடைவயலின்
பிறைவாளிற் கடிகின்ற
சூடுவாம் பேறுமேதல்
சுருதிவாம் பேறுதே."

என்று பாராட்டுகின்றான்.

நெற்களச் சிறப்பு

இங்ஙனம் விளைந்த நெற்கதிர் அறுவடை செய்யப் பெற்றுக் களத்திற்குக் கொண்டுவரப் பெறுகின்றது. நெல்லடித்துக் களம் பண்ணுவதால்தான் சீரான விறல் வேந்தர் செரு

விளைத்துச் செல்லுகின்றனர் என்றும், மனு நீதி பிறழாது விளங்குகின்றது என்றும் குறிப்பிடுகின்றான் கவிஞன். களத்தில் வந்து குவியும் படுசூட்டின் கனத்தினால்தான் மணம் மிக்க மலர் வாளியினையுடைய காமன் அடல் சூடுகின்றான்; கொடிகள் இலங்கும கோபுரங்கள் பொன் கலசத்தைச் சூடுகின்றன; முடி சூடிய மன்னர்கள் யாவரும் மூவுலகும் மெச்சும் வண்ணம் புகழ்சூடிப் பொலிவுறுகின்றனர். செந்நெல் சூட்டினை மிதித்திடுங் கோல்தான் வெம்பகைவர்களின் முரண்கெடுத்து செந்நெறி தழுவிச் செங்கோல் செலுத்தும் கோலாகும்; இக் கோல்தான் கருங்கலியை வேரோடு அகற்றுங் கோலாகும். போர்க்களத்தையும் ஏர்க்களத்தையும் புறத் துறைப் பாடல்களால் சிறப்பித்துப் பாடுதல் கவிமரபு. இத்தகைய பாடல்களைப் புறப் பொருள் வெண்பா மாலையில் காணலாம். வெண்கொற்றக்குடையைமேற்கொண்ட மன்னர்கள் மதயானைகள் படப் பொருத போர்க்களங்கள் பாடுதலைவிட ஏரின் வலியால் நெல் குவிக்கும் நெற்களம் பாடுதலே சிறந்தது என்பது கவிஞனின் கருத்து. இதற்கு,

பார்வேந்தர் பெருஞ்செல்வம்
பழுதுபடாது ஒருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வம்
அழிவுபடாது இருத்தலினால்;
தேர்வேந்தர் போர்க்களத்துச்
சிலர்வெல்வர்; சிலர்
தோற்பர்;
ஏர்வேந்தர் போர்க்களத்துள்
இரப்பவரும் தோலாரே.

என்று கவிஞன் சமத்காரமாகக் கூறும் காரணம் சுவையுடையது.

தோல்வியுற்ற களம்

உண்மையினையும் ஒருங்கே கொண்டது. தேர் வேந்தரின் போர்க்களத்தில் தோல்வியும், வெற்றியும் கிடைக்கும்; ஏர் வேந்தர் நெற்களத்தில் யாசிப்பவர்கள்கூடதோல்வியடைய மாட்டார்கள் என்ற நயம் கண்டு மகிழத்தக்கது.

இங்ஙனம் வேளாளரின் உழைப்பால் விளைந்த நெல், நெற்களங்களில் குன்று போல் குவிந்து கிடக்கின்றன; நெல் ஏராளமாக விளைந்து பொலிந்தால் நிலமகள் பொலிவு பெறுவாள். பொன் பொலிவு பெறும். தங்கக் கட்டுப்பாடே தேவையில்லை! நாடும் புகழால் பொலிவு பெறும்; செஞ்சொற் கவிதைகளும் சிறப்புடன் பொலிவு பெறும். நெற்குவித்தலின் சிறப்பினைக் கவிஞன்,

தன்னிகரொன்று ஒவ்வாத
தலம்வளர்க்கும் பெருக்காளர்
மன்னுபெருங் களத்தினிடை
மாருதத்தில் தூற்றியிடும்
செந்நெல்லைப் பொலிவாலே
செம்பொன்மலை எனக்கு
வித்தே
அந்நெல்லின் பொலிவாலே
அவனியுயிர் வளர்ப்பாரே.

மாருதம்-காற்று

என்று பாராட்டிப் புகழ்கிறான். இந்த நெற் குவியலைச் சுற்றி, உழவர் தலைவன் கையில் சிறு கோல் கொண்டு உலா வருகின்றான்; கவிஞன் இப்பூங்கோலையும் சிறப்பிக்கின்றான். இக்கோல் சினந்து எழும் கலியைச் செறுக் கறுக்கும்; நாட்டில் மனு நெறியை உண்டாக்கி வளர்க்கும். அரசர் கட்குத் தேவைப்படுங்கால் எப் பொருளையும் கொடுத்து உல கினைப் போற்றிப் புரக்கும். இந்த நெல்லின் ஒரு பகுதியே அடுத்த முறை நெல் விளைவிப்பதற்கு விதைக் கோட்டையாகின்றது. இந்தவிதைக்கோட்டையின் அடிப் படையில்தான் வேந்தர்கள் கட்டும் கற்கோட்டைகள் அமைகின்றன. இதனைக் கவிஞன்,

"வரைக்கோட்டுத் திணிபுயத்து
வளர்பொன்னித் திருநாடர்
விரைக்கோட்டை கொண்டன்றோ

வேந்தர் இடும் கோட்டைகளே'

என்று குறிப்பிடுகின்றான். இவ்வுலகில் அரியாசனத்தின் மீது இருக்கும் அரசர் பக்கம் சரியாசனம் இருந்து பெறும் பேறு ஒரு பேறு அன்று; உழவரிடம் பெறும் பேறே உண்மைப் பேறு ஆகும். என்று கூறுவன் கவிஞன். இதனை அவன்,

அரியா தனத்தின் மேலிருந்தே
அம்பொற் குடைக்கீழ் அரசி
யற்றும்
பெரியார் பக்கல் பெறும்பேறும்
பேறே அல்ல; பெருக்காளர்
சொரியா நிற்பச் சிலர்முகந்து
தூற்றா நிற்பச் சிலர்அளந்து
புரியா நிற்பப் பெறும்பேறுக்
கதுநே ரொக்கப் போதாதே.

என்று பாராட்டிப் புகழ்கின்றான். இதனையே வள்ளுவப் பெருந்தகை இன்னொரு வகையாகச் "சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று குறிப்பிடுவர். நாமும் இந்நிலையில் "மேழிச் செல்வம் வாழ்க! அது கோழை படாத செல்வமாக என்றும் விளங்குக!" என்று வாழ்த்துவோமாக! மேலும் நாம் புரட்சிக் கவிஞர் பாரதியாருடன் சேர்ந்து,

உழவுக்கும் தொழிலுக்கும்
வந்தனை செய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை
நிந்தனை செய்வோம்.

என்று பள்ளுப் பாடி மேழிச் செல்வத்தைப் பாராட்டுவோமாக.

—"தினமணி"

மனித சமூகத்தில் வாழும் ஒருவன்—சிறப்பாக இல்லறத்தான்—தற்காப்பிற்காக ஆவன செய்வது போல் பாவனை பண்ணத்தான் வேண்டும். ஆயினும் தீங்குக்குப் பதில் தீமை செய்யும் எண்ணம் அவன் மனத்தில் புகுதல் ஆகாது.

—ஸ்ரீராமகிருஷ்ணர்

சர். சி. பி சரிதை

அனைவராலும் அன்பாக "ஸி. பி." என்று அழைக்கப் பட்டுவந்த டாக்டர் ஸி. பி. ராம ஸ்வாமி அய்யர் 1879-ம் வருஷம் நவம்பர் 12-ந் தேதியன்று பிறந்தார். அன்று தீபாவளி தினம்.

சென்னை ஹைகோர்ட்டில் பிரபல வக்கீலாய் விளங்கி வந்த திரு. பட்டாபிராமய்யரின் ஏக புதல்வரான ஸி. பி. 1903-ம் வருஷத்திலேயே தந்தையை இழந்து விட்டார்.

வெஸ்லி உயர்நிலைப் பள்ளி, ராஜதானிக் கல்லூரி, சென்னை சட்டக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி பயின்று, தந்தை மறைந்த அதே வருஷத்தில் வக்கீல் தொழிலில் ஈடுபட்டார்.

அக்காலத்தில் பிரபலமாய் விளங்கி வந்த திரு. வி. கிருஷ்ணசாமி அய்யரின் கீழ் அவர் வக்கீல் தொழில் பழகினார்.

வக்கீல் தொழிலில் பிரபலமடைந்த அன்னார், பின்னர் காங்கிரசில் சேர்ந்து அரசியலில் ஈடுபட்டார். 1917-18-ம்வருஷத்தில் அ. இ. கா. க. காரியதரிசியாகப் பணியாற்றினார்.

ஒத்துழையாமை இயக்கத்தின் போது கருத்து வேறுபாடு கொண்டு, காங்கிரசிலிருந்து விலகி, அன்னிபெஸண்ட் அம்மையாரின் சுயாட்சி இயக்கத்தில் சேர்ந்தார்.

இந்திய அரசியல் வரலாற்றில் மைல்கல்களாக விளங்கிய பல முக்கிய கமிஷன்கள் முன்பு ஸி. பி. சாட்சியமளித்திருக்கிறார். சவுத்பரோ கமிஷன் மாண்டேகு செம்ஸ்போர்டு கமிஷன் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். நிதி விஷயங்கள் பற்றிய மெஸ்டன், கமிட்டி முன்பும் அன்னார் சாட்சியமளித்தார்.

இந்திய அரசியல் சீர்திருத்தம் பற்றி 1919-இல் விசாரணை நடத்திய கூட்டு பார்லிமெண்ட் கமிட்டி முன்பும் லண்டனில் சாட்சியமளித்தார்.

சட்டசபை பணி

1920-ம் வருஷத்தில் அரசியல் சீர்திருத்தத்தின்கீழ் ஏற்பட்ட சென்னை லெஜிஸ்லேடிவ் கவுன்சிலில் அங்கத்தினராக இருந்தார். அதே வருஷத்தில் அவர் சென்னை மாகாணத்தின் அட்வகேட் ஜெனரலானார்.

1926, 27-ம் வருஷங்களில் சர்வதேச சங்கத்தில் இந்தியப் பிரதிநிதிகளில் ஒருவராக இருந்து வந்தார்.

1923 முதல் 1928 வரை சென்னை சர்க்காரின் (கவர்னர் நிர்வாக சபையில்) சட்ட இலாகா அங்கத்தினராக இருந்தார்.

1924-இல் நிர்வாகக் கவுன்சிலின் உப-தலைவரானார்.

சர்க்காரிலிருந்து ராஜினாமா

1928-மார்ச்சில் சென்னை சர்க்காரிலிருந்து அவர் ராஜினாமா செய்து விட்டு, மீண்டும் வக்கீல் தொழிலில் புகுந்தார்.

சைமன் கமிஷன் பகிஷ்காரம்

கவர்னரின் நிர்வாக சபையிலிருந்து ராஜினாமா செய்ததும் அவர் சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் கலந்துகொண்டார். இந்தியாவின் எதிர்கால அரசியல் அமைப்பு குறித்துவிசாரணை நடத்துவதற்காக பிரிட்டிஷ் சர்க்காரால் நியமிக்கப்பட்ட அந்தக் கமிஷனில் எல்லா அங்கத்தினர்களும் வெள்ளைக்காரர்களாயிருந்தும், சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் அன்னிபெஸன்ட் அம்மையார் முன்னணியில் விளங்கியதும் சமீபகால சரித்திர நிகழ்ச்சிகள்.

1928-ம் வருஷத்தில் பட்லர் விசாரணைக் கமிட்டியின் முன்பு கொச்சி சமஸ்தானத்தின் சார்பில் அவர் சாட்சியம் அளித்தார். "பிரிட்டிஷ் இந்தியா" என்று அழைக்கப்பட்டு வந்த பகுதிகளையும், சமஸ்தானங்களையும் ஒரு சமஷ்டியாக இணைப்பதற்காக 1930-இல் அரசியல் அமைப்பு விதிகளைத் தயாரித்த உப-கமிட்டியிலும் ஸி. பி. அங்கம் வகித்தார்.

வட்டமேஜை மகாநாடு

1931-ஆம் வருஷம்லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாட்டில் ஒரு பிரதிநிதியாகக் கலந்துகொண்டார். அந்த மகாநாட்டினால் அமைக்கப்பட்ட சமஷ்டி அமைப்புக் கமிட்டியில் அங்கத்தினராயிருந்தார்.

மத்ய சர்க்காரில்

1931-ம் வருஷத்தில் இந்திய சர்க்காரில் ஆக்டிங்சட்ட இலாகா அங்கத்தினராகப் பணிபுரிந்தார். 1932-இல் ஆக்டிங் வர்த்தக இலாகா அங்கத்தினரானார்.

1983-ஆம் வருஷத்திய வெள்ளை அறிக்கையைப்பரிசீலிப்பதற்காக சமஸ்தானாதிபதிகள் சபை நியமித்த கமிட்டியின் தலைவராகப் பணியாற்றினார்.

திருவாங்கூர் திவானாக

1936-ஆம் வருஷத்திலிருந்து 47-ம் வருஷம் வரை திருவாங்கூர் திவானாகப் பொறுப்பேற்று, அந்தச் சமஸ்தானத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார்.

"சச்சிவோத்தமர்" என்ற பட்டத்தை திருவாங்கூர் மகாராஜா அவருக்கு வழங்கினார்.

ஹரிஜன ஆலயப் பிரவேசம்

1936-ஆம் வருஷத்தில் திருவாங்கூரில் நடைபெற்ற ஹரிஜன ஆலயப் பிரவேச நிகழ்ச்சி சரித்திரப் பிரசித்தி பெற்ற செய்தியாகும். மகாராஜாவின் ஆலயப் பிரவேச பிரகடனத்தை வெற்றிகரமாக அமல் நடத்தியவர் ஸி.பி. தான். திருவனந்தபுரத்தில் ஸ்ரீ பத்மநாபஸ்வாமி ஆலயத்தில் ஹரிஜனங்கள் அனுமதிக்கப்பட்டதை யடுத்தே, தென்னிந்தியா

வில் பிற கோவில்களிலும் ஹரி ஜனங்கள் அனுமதிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலில் மகாத்மாஜி சொல்வதை அன்னார் ஏற்றுக்கொள்ளவில்லை யென்றபோதிலும், ஹரிஜன ஆலயப் பிரவேசப் பிரச்னையில் மகாத்மாஜியின் ஆலோசனையின்படி முதன் முதலாக நடந்து கொண்டவர் ஸி. பி. தான்.

ஆகஸ்டு இயக்கத்தின் போது ராஜிநாமா

மகாத்மாஜியுடன் அவருக்கு அனேக விஷயங்களில் வேறுபாடு இருந்தபோதிலும், 1942-ம் வருஷத்தில் ஆகஸ்டு இயக்கத்தின் போது மகாத்மாஜியும் பிற தலைவர்களும் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து அவர் வைஸ்ராய் நிர்வாக சபையில் அங்கத்தினர் பதவியை ராஜினாமா செய்தார். அந்தப் பதவிக்கு அவர் 2 வாரங்களுக்கு முன்புதான் நியமிக்கப்பட்டார்.

மீண்டும் திருவாங்கூருக்கு

இந்தப் பதவியை ராஜினாமா செய்த பிறகு அவர் மீண்டும் திருவாங்கூர் திவானாக நியமிக்கப்பட்டார்.

1944-ம் வருஷத்தில் இந்திய சர்க்காரின் யுத்த பிற்கால புனருத்தாரணக் கமிட்டியில் அங்கம் வகித்தார். மத்திய கல்வி போர்டிலும் அங்கம் வகித்தார்.

1946-இல் இந்தியாவின் அரசியல் அதிகாரம் பற்றிப் பரிசீலித்த பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தூது கோஷ்டியின் முன்பும் மந்திரிசபை தூதுகோஷ்டியின் முன்பும் ஸி. பி. சாட்சியமளித்தார்.

பிரிட்டிஷ் மந்திரிசபைத் திட்டத்தின்கீழ் சமஸ்தானாதிபதிகள் சார்பில் பேச்சுவார்த்தை நடத்திய தூதுகோஷ்டியிலும் அவர் அங்கம் வகித்தார்.

பிரிட்டிஷ் மேலாதிக்கம் முடிவடையும்போது சமஸ்தானங்கள் சுதந்திரம் பெற்றுவிட்டதாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்தை அவர் எடுத்துரைத்தார். புதிதாக ஏற்பட்ட பாகிஸ்தானுக்கு திருவாங்கூர் சார்பில் ஒரு ஸ்தானிகர்கூட நியமிக்கும் அளவுக்குப் போய்விட்டார்.

கல்வித்துறைப் பணி

அன்னார் இருமுறை அண்ணாமலை சர்வகலாசாலையின் உப-அத்தியட்சகராகப் பணியாற்றினார். சிறிது காலம் காசி ஹிந்து சர்வகலாசாலை உப-அத்தியட்சகராகவும் இருந்திருக்கிறார்.

1937-ம் வருஷத்தில் திருவாங்கூர் சர்வகலாசாலையின் உப-அத்தியட்சகராயிருந்தார். அதே வருஷத்தில் லண்டன் ராயல் ஆர்ட் சொஸைட்டியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கல்வித் துறைச் செய்திகள்

ஆசிரியர்களுக்குப் புதிய வேலையா?

குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு பிரசாரத்தில் ஈடுபட வேண்டுமாம்

தஞ்சாவூர், அக். 15—கலெக்டரின் சமுதாய நல உதவியாளர் உத்தரவுப்படி திருவையாறு பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகள் எல்லாவற்றிற்கும் விடுமுறை விடப்பட்டு எல்லா ஆசிரியர்களும் திருவையாறு உயர்நிலைப் பள்ளியில் கூட்டப் பட்டார்கள். சுமார் 200 ஆசிரியர்கள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டதாகத் தெரிகிறது. மேற்படி கூட்டத்தில் கலெக்டரின் உதவியாளர் திரு. சுப்ரமண்யம் பேசுகையில், சமுதாய நலப்பணியில் ஆசிரியர்கள் நல்ல முறையில் பங்கு கொண்டு சர்க்கார் திட்டங்கள் செயல்பட உதவவேண்டும் என்றும், தாங்களாக திட்டங்களில் முதலீடு செய்யும் நிலையில் ஆசிரியர்கள் இல்லை என்பதை தான் உணர்வதாகவும், ஆனால் திட்டங்களில் பங்கு கொள்ள மற்றவர்களைத் தூண்டுவது ஆசிரியர்களுக்குப் பெரிய காரியமில்லை என்றும், ஆசிரியர்கள் மனது வைத்தால் நடக்கக்கூடாதது ஒன்றும் இல்லை என்றும், ஆகையால், இங்குள்ள ஒவ்வொரு ஆசிரியரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் அறுவைச் சிகிச்சைக்கு இரண்டு நபர்களைப் பிரசாரம் செய்து அழைத்துவர வேண்டும் என்றும், அத்துடன் சிறு சேமிப்பு நிதியின் ஒரு பகுதியாக போஸ்டாபீஸில் மாதம் ரூ. 5 வீதம் பணம் கட்டும்படி ஒவ்வொரு ஆசிரியரும் 10 நபர்களிடம் பிரசாரம் செய்து வசூல் செய்யவேண்டும் என்றும், இன்று யூனியன் பள்ளிகளுக்கு விடுமுறை விடச் செய்து ஆசிரியர்கள் எல்லோரையும் ஒரு முகமாகக் கூட்டி இந்த வேண்டுகோள் விடுவதிலிருந்து இதன் முக்கியத்துவத்தை ஆசிரியர்கள் உணர்ந்து நடந்துகொள்வார்கள் என்று தான் நம்புவதாகவும் சொன்னதாகத் தெரிய வருகிறது.

—"தினமணி"

* * *

தமிழரல்லாதாருக்கு தமிழ்ப் போதனை

அண்ணுமலையில் அக். 3-ல் வகுப்பு

வெளிநாடுகளிலிருந்தும் பலர் சேர்ந்துள்ளனர்

சிதம்பரம், செ. 26—தமிழர் அல்லாதாருக்கு தமிழ் பேசச் சொல்லித் தரும் 8 வார தீவிரப் பயிற்சித் திட்டம் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் அக். 3-ந்

தேதி போராசிரியர் திரு. ஷண்முகம் பிள்ளை தலைமையில் துவங்கும்.

வருஷத்திற் கொருமுறை நடக்கும் இந்த 5-வது பயிற்சி வகுப்பை உப அத்யட்சகர் துவக்கி வைப்பார்.

இந்த வகுப்பில் இவ்வருஷம் சுவீடன், டென்மார்க், பிரான்ஸ், இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து 15 மாணவர்களுக்குமேல் சேர்ந்திருக்கிறார்கள். வட இந்தியாவிலிருந்து இருவர் வந்திருக்கிறார்கள்.

இந்த வகுப்பில் சேர ரொம்ப பேர் முன் வருகிறார்கள். ஆனால் 15 பேரைத் தான் சேர்த்துக் கொள்ள முடிகிறது.

* * *

மத்திய ஊழியர் கிராக்கிப்படி

கமிஷன் சிபாரிசு: ஒரு திருத்தம்

புதுடில்லி, அக். 18—மத்திய ஊழியர்களின் கிராக்கிப்படியை உயர்த்த கஜேந்திரகட்கர் கமிஷன் சிபாரிசு செய்திருப்பதாக செய்தி ஏற்கெனவே பிரசுரிக்கப்பட்டிருந்தது. பல்வேறு வருமான பிரிவிலுள்ள ஊழியர்களின் கிராக்கியப்படி ரூ. 9 முதல் ரூ. 20 வரை உயர்த்தப்படும் என்று செய்தி வெளியாகியது நினைவிருக்கலாம்.

இது சம்பந்தமாக பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் ஒரு தவறு நேர்ந்து விட்டது. ஒவ்வொரு பிரிவினருக்கும் கமிஷன் சிபாரிசு செய்துள்ள கிராக்கிப்படி எவ்வளவு என்பது பற்றி சரியான அட்டவணையை இப்போது தருகிறோம். கமிஷன் செய்துள்ள சிபாரிசு பின்வருமாறு :—

வருமானம்	இப்போது பெறும் படி	1965 டிச. முதல் 66 ஜூலை 13உ முடிய	1-ந் தேதி ஆக 1 உ யிலிருந்து
ரூ.	ரூ.	ரூ.	ரூ.
ரூ. 70 முதல் ரூ. 109 வரை	38	41	47
ரூ. 110 முதல் ரூ. 149	58	61	70
ரூ. 150 முதல் ரூ. 209	76	78	90
ரூ. 210 முதல் ரூ. 399	93	96	110
ரூ. 400 முதல் ரூ. 999	190	105	120

ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிக்க திட்டக் கமிஷன் முழு யோசனை

புதுடில்லி, செப். 29—கல்வித் திட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண வேண்டுமானால், தாமதமின்றி ஆசிரியர்களின் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்று திட்டக் கமிஷனின் கல்விக் குழு ஏகமனதாக அபிப்பிராயம்தெரிவித்துள்ளது.

திட்டக் கமிஷனின் இக்குழு நான்காவது திட்டத்தை விரிவாக விவாதித்தது. ஆரம்ப, செகண்டரி பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்தும்படி ராஜ்ய சர்க்கார்களுக்குத் தூண்டுதல் தர நான்காவது திட்டத்தில் ஏதாவது செய்யப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்துள்ளது.

திட்டத்துடன் சம்பந்தப்படாத வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட வசதிகளை ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்துவதற்குப் பயன்படுத்துவது சம்பந்தமாக ராஜ்யங்களின் திட்ட வசதிகளையும் திட்ட வேலைகளுடன் சம்பந்தப்படாத வசதிகளையும் பற்றி மறு பரிசீலனை செய்யும்படி திட்டக் கமிஷனை இக்குழு கேட்டுக் கொண்டது.

ஆரம்ப, செகண்டரி பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களின் சம்பளங்கள் குறைவாயிருக்கிறது. ஆசிரியர்களின் சம்பளங்களை உயர்த்துவதற்கு ஏராளமான பணம் செலவாவதால் ராஜ்ய சர்க்கார்கள் அவற்றை உயர்த்த முடியவில்லை என்று பொதுவாகக் கருதப்பட்டது.

பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு அதிகமான குறைந்தபட்ச ஆரம்ப சம்பளம் அளிக்கப்படவேண்டும் என்று குழு சிபாரிசு செய்துள்ளது.

ஆசிரியர்களின் சம்பளம் சம்பந்தமாக கல்விக் கமிஷன் செய்துள்ள சிபாரிசுகளை அமல் நடத்துவதாயிருந்தால் வருஷத்துக்கு ரூ. 160 கோடி அல்லது நான்காவது திட்ட காலம் முழுவதுக்கும் 800 கோடி தேவை என்று டாக்டர் வி. கே ஆர். வி. ராவ் விளக்கினார். நான்காவது திட்டத்தில் கல்விக்காக ஒதுக்கியுள்ள ரூ. 1210 கோடியிலிருந்து இந்தத் தொகையை ஒதுக்குவதாயிருந்தால் மற்ற வேலைகளுக்குப் பணமேயிராது என்றார்.

ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தவும், வேலை நிலைமைகளை அபிவிருத்தி செய்யவும், சமுதாயம் பொறுப்பேற்க வேண்டும் என்று டாக்டர் ராவ் கூறினார். எனினும் குழுவின் சிபாரிசுகள் கவனத்தில் கொள்ளப்படும் என்றார்.

* * *

திட்ட நகல்-கல்விக் கமிஷன் அறிக்கை இடையே வேறுபாடுகள்

கமிஷன் முன்பு டாக்டர் ராவ் பேச்சு

புதுடில்லி, செப். 26—பள்ளிக்கூடக் கல்வியின் அமைப்பு பற்றி நான்காவது திட்ட நகலுக்கும், கல்விக் கமிஷன் அறிக்கைக்

கும் இடையே பலத்த கருத்து வேறுபாடு இருப்பதாக திட்டக் கமிஷன் மெம்பர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் இங்கு கூறினார்.

7 வருட ஆரம்பக் கல்வி, 3 வருட கீழ் செகண்டரி கல்வி, 2 ஆண்டு உயர் செகண்டரி கல்வி ஆக மொத்தம் 12 வருட அமைப்பை கல்விக் கமிஷன் சிபாரிசு செய்திருக்கிறது.

பள்ளிக்கூட கல்வியில் இரண்டு ஆண்டு சேர்ப்பதைவிட கல்லூரிக் கல்வியில் ஒரு வருடம் சேர்த்து பி.யு.சி. பாடத்தை ஈராண்டாகச் செய்வது நல்லது என்று அவர் சொன்னார்.

திட்டக் கமிஷன் கல்விப் பிரிவில் அவர் பேசினார்.

ஒரு வருட காலத்தை அதிகரித்து உயர்நிலைப் பள்ளிகளை உயர் செகண்டரி பள்ளிகளாக்கும் சோதனையும் வெற்றி பெறவில்லை. அக்கருத்தைப் பல ராஜ்யங்கள் கைவிட்டு விட்டன என்றார் ராவ்.

பி. யு. சி. பாடத்திற்குப் பதிலாக ஜூனியர் கல்லூரிகளை ஏற்படுத்தும் விஷயத்தை கவனிக்கலாம் என்றும் ராவ் யோசனை கூறினார்.

வேறுபாடுகள் உள்ள ஓரிரு முக்கிய விஷயங்களைத் தவிர தேச கல்வி அபிவிருத்தியின் எதிர்காலத்தில் திட்டக் கமிஷனுக்கும், கல்விக் கமிஷனுக்குமிடையே பொதுவான உடன்பாடு இருப்பதாக டாக்டர் ராவ் கூறினார்.

*　*　*

கல்லூரி போதனா மொழி: திட்டக் கமிஷன் குழுவில் சர்ச்சை

"ஆங்கிலத்தை விரைவில் மாற்றலாம்"

—கல்விக் கமிஷன் தலைவர்

இரு மொழி ஏற்பாடு பல ஆண்டு நீடிப்பது தவிர்க்க ஆகாது என குழுவின் கருத்து

புதுடில்லி, செப். 29—சர்வகலாசாலைகளில் எந்த மொழியில் பாட போதனை அளிக்கப்பட வேண்டும் என்பது சம்பந்தமாக திட்டக் கமிஷன் கல்விக் குழுவில் பலத்த சர்ச்சை நிலவியது.

குழுவின் மூன்று நாள் கூட்டம் நேற்று முடிவடைந்தது. இந்திய மொழிகள் போதனா மொழிகளாக இல்லாவிட்டால், நாடு தொழில் வளர்ச்சி காண முடியாது என்று கல்விக் கமிஷன் தலைவரான டாக்டர் டி. எஸ். கோத்தாரி கூறினார்.

ஆங்கிலத்தில் சொல்லிக் கொடுப்பதைப் புரிந்து கொள்வது மாணவர்களுக்குச் சிரமமாயிருக்கிறது. ஆங்கிலத்தையே நீடிப்பது நாட்டின் நலனுக்கு உகந்ததன்று என்றும் டாக்டர் கோத்தாரி கூறினார்.

10 வருஷ காலத்திற்குள் போதனா மொழியை மாற்றலாம் என்று கல்விக் கமிஷன் யோசனை தெரிவித்துள்ள போதிலும், அதற்கு முன்னதாகவே அதை மாற்றிவிட முடியும் என்று தாம் கருதுவதாக டாக்டர் கோத்தாரி கூறினார்.

டாக்டர் கோத்தாரியின் கருத்தை கம்யூனிஸ்டுத் தலைவர்

திரு. ஹிரேன்முக்கர்ஜி ஆதரித்தார். மேற்கொண்டு தாமதமின்றி அதை மாற்ற வேண்டும் என்று அவர் கூறினர்.

இந்த முக்கியமான பிரச்னை பற்றி நான்காவது திட்ட நகலில் பிரஸ்தாபம் எதுவும் இல்லாதது குறித்து தமது ஆட்சேபனையைத் தெரிவித்தார். பிரச்னையை ஒத்திப் போடுவதாக கமிஷன் மீது திரு. முகர்ஜி குற்றம் சாட்டினர்.

திட்டக்கமிஷன் சார்பில் தாம் உறுதி எதுவும் அளிப்பதற்கில்லை என்று திட்டக் கமிஷனின் கல்விக்குழுவின் தலைவர் டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் கூறினர். “இந்தத் திட்டத்தை உடனடியாக அமல் நடத்தச்செய்ய கிளர்ச்சியை, ஆரம்பிக்க வேண்டியிருக்கும் என்ற எண்ணத்துடன் இந்த மண்டபத்தை விட்டு வெளியேற விரும்பவில்லை” என்று திரு. முகர்ஜி கூறினர்.

இரு மொழி ஏற்பாடு

சர்வகலாசாலைகளில் இன்னும் பல வருஷங்களுக்குப் பல மொழி ஏற்பாடு தவிர்க்க முடியாதது. என்று குழு சிபாரிசு செய்திருப்பதைக் குறிப்பிட்டு இதற்கு அர்த்தமேயில்லை என்று திரு. முகர்ஜி கூறினர்.

புரொபஸர் ஹுமாயூன் கபீர் தலைமையில் ஒரு கோஷ்டி தெரிவித்த அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு குழு இந்த சிபாரிசைச் செய்தது.

செகண்டரி பள்ளிகள், சர்வகலாசாலைகளில் போதனை மொழி பற்றி பரிசீலித்த கோஷ்டி செகண்டரி கட்டத்தில் ஒரு பிராந்திய மொழியே பெரும்பாலும் போதனை மொழியாயிருப்பதைக் குறிப்பிட்டது. சில பள்ளிக்கூடங்கள், வேறு மொழியைப் போதனை மொழியாக உபயோகிக்கும் சாத்தியத்தை நிராகரிக்கவில்லை. சர்வகலாசாலை கட்டத்தில் போதனை மொழி பற்றி காரசாரமான அபிப்பிராய பேதம் காணப்பட்டது. ஒரு இந்திய மொழிதான் போதனை மொழியாயிருக்க வேண்டும் என்று மெஜாரிட்டியினர் அபிப்ராயப்பட்டனர். ஆனல் எல்லா சர்வகலாசாலைகளிலும் ஒரே ஒரு மொழி தான் போதனை மொழியாயிருக்க வேண்டும் என்று ஒரு பகுதியினர் கருதினர். ஆனல் இது இந்தியாயிருக்க வேண்டுமா அல்லது ஆங்கிலமாயிருக்க வேண்டுமாஎன்பதில் அபிப்பிராய பேதம் காணப்பட்டது.

எனினும் பல வருஷங்களுக்கு இரு மொழி ஏற்பாடு நீடிப்பது தவிர்க்க முடியாதது என்று ஏகமனதாகஅபிப்பிராயம்நிலவியது. சர்வதேச தொடர்புகளுக்கு முக்கியமாக ஆங்கிலத்தின் தரத்தை உயர்த்த சகல முயற்சிகளும் செய்யப்பட வேண்டும் என்று கோஷ்டி கருதியது.

போதனை மொழி பற்றி என்ன முடிவு செய்தாலும், எல்லா இந்திய மொழிகளிலும் சர்வகலாசாலை கட்டம் வரை தகுந்த புத்தகங்களுக்கு, ஏற்பாடு செய்வது அவசியம் எனக் கருதப்பட்டது.

* * *

Association Publishing House

'ஆரம்பக் கல்வி நிலையம்'

94/95, New Street, Mannady, Madras-1.

(For High Schools and Higher Ele. Schools)

Phone: 24544 Post Box No. 1818

MATHEMATICS

ஆசிரியர்: பி. வீரராகவன்

சிறுவர் கணக்கு நூல்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·65		
மூன்றும் வகுப்பு	0·87	37	18-5-'66

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்: பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஆறும் வகுப்பு	1·50	50	18-5-'66

ஆசிரியர்: A. C. பாலசுந்தரம், பி.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	1·75	13	16-5-'62

SCIENCE

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர்: பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0·40		
மூன்றும் வகுப்பு	0·50		

ஆசிரியர்: M. விவேகானந்தா பி.எஸ். சி., எல்.டி.,

நான்காம் வகுப்பு	0·75	6	18-5-'66

சிறுவர் ஆரம்ப விஞ்ஞானம்

ஆசிரியர்: கே. லக்ஷ்மிநாராயணசாமி, பி.ஏ., எல்.டி.

ஐந்தாம் வகுப்பு	1·25	9	18-5-66

பொது விஞ்ஞானம்

ஆறும் வகுப்பு	1·25	25	18-5-'66

ஆசிரியர் : பி. வி. நாகராஜன், பி.ஏ., எல்.டி.

ஒன்பதாம் வகுப்பு	1·75	33	18-5-66
பதினோராம் வகுப்பு	2·50	35	10-5-'61

HISTORY

ஆசிரியர் : பி. வீரராகவன்

சிறுவர் வரலாறு

மூன்றும் வகுப்பு 0·60

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·87	11	18-5-66
செங்கற்பட்டு	0·87	12	18-5-66
வட ஆற்காடு	0·87	12	,,
தென் ஆற்காடு	0·87	12	,,
சேலம்	0·87	12	,,
கோயமுத்தூர்	0·87	12	,,
நீலகிரி	0·87	12	,,
தஞ்சாவூர்	0·87	12	,,
திருச்சி	0·87	12	,,
மதுரை	0·87	12	,,
இராமநாதபுரம்	0·87	12	,,
திருநெல்வேலி	0·87	12	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	42	,,
ஆறும் வகுப்பு	1·00	54	,,

SOCIAL STUDY

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

ஏழாம் வகுப்பு	2·00	18	16-5-'62

GEOGRAPHY

ஆசிரியர் : பி. வீரராகவன்

மூன்றும் வகுப்பு

சிறுவர் பூகோளம்

சென்னை) 0·60

ஆசிரியர் : த. சே. உமாபதி, எம்.ஏ., எல்.டி.

நான்காம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
சென்னை	0·62	46	18-5-66
செங்கற்பட்டு	0·62	19	,,
வட ஆற்காடு	0·62	18	18-5-66
தென் ஆற்காடு	0·62	18	,,
சேலம்	0·62	19	,,
கோயமுத்தூர்	0·62	19	,,
நீலகிரி	0·62	19	,,
ஐந்தாம் வகுப்பு	1·00	19	18-5-'66

TAMIL GRAMMER

இலக்கணமும் மொழிப் பயிற்சியும்

ஆசிரியர் : புலவர் சொ. முருகேசனார்

ஆறும் வகுப்பு	0·75	4	16-5-'62
எட்டாம் வகுப்பு (III Form)	0·75	4	10-5-'61

இலக்கணம் கட்டுரை மொழிப் பயிற்சி

புதிய பத்தாம் வகுப்பு	1·25	11	18-5-'60
புதிய பதினோராம் வகுப்பு	1·50	31	10-5'-61

ஐந்தாம் வகுப்பு

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
நீதிக் கதைகள்	0·50	17	18-5-60
அறிவுக் கதைகள்	0·50	15	18-5-60

TAMIL NON-DETAILED

ஆறும் வகுப்பு			
அறிவுச் சுடர்	0·62	22	18-5'-66
பத்தாம் வகுப்பு			
நாடும் மக்களும்	1·00	17	18-5-'60

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
தொண்டை நாட்டு மன்னர்	1·00	19	18-5-'60
பூம்புகார்	0·87	16	,,
திரு. வி. க.	0·87	32	13-5-'59

ENGLISH NON-DETAILED

Author: Mrs. Lucy Arul Raj

VI STANDARD

Mother India Supplementary Reader

	0·50	49	18-5-66

III Form

VIII STANDARD

Mother India Supplementary Reader

	0·62	24	10-5-'61

கணிதம் கற்பிக்கும் முறை

ஆசிரியர்: லீலா பார்த்தசாரதி, பி.ஏ., எல்.டி.

	2·00	2	5-7-'61

சமூக பாடப் பயிற்சி நூல்

ஆசிரியர்: ஆர். சேஷாத்திரி, பி.ஏ., பி.டி.

எட்டாம் வகுப்பு	1·00
பத்தாம் வகுப்பு	1·25
பதினோராம் வகுப்பு	1·50

உமாபதி உரை நூல்

மூன்றும் வகுப்பு	0·40
நான்காம் வகுப்பு	0·50
ஐந்தாம் வகுப்பு	0·60
ஆறும் வகுப்பு	1·00
ஏழாம் வகுப்பு	1·25

Association English Premier III Class 0·60

Association English guide IV Class 0·40 n.p.

புது முறை சங்க வாய்பாடு

100 பிரதிகள் 8·00

Edited Printed and Published by P. VEERARAGHAVAN.
at Venkatesan Press, 2-65, Broadway, Madras-1.